**(D)** பட்டினப்பாலை

---

**157.** Bursar-2023 **சங்க இலக்கியத்தில் போர் கடவுளாக குறிப்பிடப்பட்ட தெய்வம் எது?**

**(A)** திருமால்
**(B)** சிவன்
**(C)** முருகன்
**(D)** இந்திரன்

---

**158.** Bursar-2023 **பொருத்துக:
இலக்கியம் – மக்கள் வாழ்வியல்
(a) சிலப்பதிகாரம் – 1. உரிமை சுற்றம்
(b) கலித்தொகை – 2. அடிமை முத்திரையிடல்
(c) மலைபடுகடாம் – 3. அரண்மனையின் ஆடம்பர உபகரணங்கள்
(d) நெடுநல்வாடை – 4. மக்கள் உணவு பழக்க வழக்கம்**

**(A)** 2 1 3 4
**(B)** 1 2 4 3
**(C)** 4 3 2 1
**(D)** 1 2 3 4

---

**159.** Veterinary Assistant-2023 **கிண்டலாக அறிவுரை சொல்கின்ற ஒரு வகை வாய்மொழி இலக்கியத்தின் பெயர்**

(A) விடுகதை (B) சொலவடை
(C) பிசி (D) பழமொழி

**160.** Fishery Inspector-2023 **“பிறப்பு ஓர் அன்ன உடன் வயிற்று உள்ளும்,**
**சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்” –**
**எனும் புறநானூற்றுப் பாடல் உணர்த்தும் கருத்து யாது?**

(A) பாசம் (B) கல்வி
(C) செல்வம் (D) வீரம்

**161.** Fishery Inspector-2023 **எந்த அதிதீவிர வைதீக நடவடிக்கைகளில் ஈடுபட்ட சைவ முனிவர்களின் பெயர் மணிமேகலையில் குறிப்பிடப்பட்டுள்ளது?**

(A) சங்கியர் (B) காபாலிகர்
(C) வைசேஷிகர் (D) அஜ்விக்கா

**162.** Health Officer-2023 **சங்க காலத்தில் பண்டமாற்று முறை இருந்தது என்பதை எதில் குறிப்பிடப்பட்டுள்ளது?**

(A) குறுந்தொகை (B) பதிற்றுப்பத்து
(C) பரிபாடல் (D) கலித்தொகை

**163.** Veterinary Assistant-2023 **“செந்தமிழ்த் தேனீ! சிந்துக்குத் தந்தை!**
**குவிக்கும் கவிதைக் குயில்! இந்நாட்டினைக்**
**கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவியரசு”**
**– இந்தப் பாடலோடு தொடர்புடைய இருவர் யார்?**

(A) பாரதியார், அப்துல் ரகுமான் (B) கலைஞர் கருணாநிதி, வைரமுத்து
(C) கண்ணதாசன், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் (D) பாரதியார், பாரதிதாசன்

**164.** Veterinary Assistant-2023 **கோடிட்ட இடத்தை நிரப்புக:**
**சீன மிசிரம் யவனரகம் - இன்னும்**
**தேசம் பலவும் புகழ்வீசிக் - கலை**
**ஞானம் படைத்தொழில் வாணிபமும் - மிக**
**நன்று வளர்த்த _____**

(A) தமிழ்நாடு (B) தேசியத் திருநாடு
(C) நாவலம் நன்னாடு (D) தாய்நாடு

**165.** Veterinary Assistant-2023 **இராமாயணத்தில் சுந்தரன் என்னும் பெயரால் அழைக்கப்படுபவர் யார்?**

(A) இராமன் (B) இலக்குவன்
(C) விபீடணன் (D) அனுமன்

**166.** Veterinary Assistant-2023 **பத்துப்பாட்டில் செம்பாதி எவ்வகை நூல்கள்?**

**(A)** அக நூல்கள் **(B)** புற நூல்கள்
**(C)** ஆற்றுப்படை நூல்கள் **(D)** அகப்புற நூல்கள்

**167.** JRO & Assistant Professor (Psychology)-2023 **கடையேழு வள்ளல்களில் நீலமணியையும், நாகம் தந்த கலிங்கத்தையும் சிவனுக்கு அளித்தவர் யார்?**

**(A)** காரி **(B)** ஓரி
**(C)** ஆய் அண்டிரன் **(D)** நல்லி

**168.** JRO & Assistant Professor (Psychology)-2023 **கலிங்கத்துப் பரணியில் குறிப்பிடப்பட்டுள்ள 'யோகா' என்ற சொல்லின் பொருள் விளக்கம்**

**(A)** உடற் பயிற்சி செய்தல் **(B)** மந்திரங்கள் ஓதுதல்
**(C)** வழிபடுதல் **(D)** மனதை ஒருமுகப்படுத்துதல்

**169.** Road Inspector-2023 **எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் ஏறத்தாழ _____ பாடல்களைக் கொண்ட இலக்கிய கருவூலமாகும்.**

**(A)** 2400 **(B)** 3400
**(C)** 4400 **(D)** 5400

**170.** DEO-2023 **பொருத்துக:**

(a) சருக்கம் – 1. சீவக சிந்தாமணி
(b) இலம்பகம் – 2. பாரதம்
(c) படலம் – 3. சிலப்பதிகாரம்
(d) காண்டம் – 4. கம்பராமாயணம்

**(A)** 2 1 4 3 **(B)** 1 2 3 4
**(C)** 4 3 2 1 **(D)** 3 2 4 1

**171.** DEO-2023 **சரியான விடையைத் தேர்க:**

1. சீவகசிந்தாமணி இயற்றிய திருத்தக்கத்தேவர் சோழ அரச மரபினராய் இருந்து துறவறம் பூண்டவர்.
2. சீவகசிந்தாமணியே விருத்தத்தில் அமைந்த முதல் தமிழ்ப் பெருங்காப்பியமாகும்.
3. திருத்தக்கத்தேவர் நரிவிருத்தம் என்னும் நிலையாமை நூல் ஒன்றையும் இயற்றியுள்ளார்.
4. சீவகசிந்தாமணி பன்னிரண்டு இலம்பகங்களையும் இரண்டாயிரம் பாடல்களையும் உடையது.

**(A)** 1, 2, 3 சரி 4 தவறு **(B)** 1, 3, 4 சரி 2 தவறு
**(C)** 1, 2 சரி 3, 4 தவறு **(D)** 1, 3 சரி, 2, 4 தவறு

**172.** DEO-2023 **“கூர்வேல் குவைஇய மொய்ம்பின்
தேர்வண் பாரிதண் பறம்பு நாடே”
– என்ற பாடல் அடி இடம்பெறும் நூல் எது?**

(A) பதிற்றுப்பத்து
(B) பட்டினப்பாலை
(C) புறநானூறு
(D) அகநானூறு

**173.** DEO-2023 **புத்தமதத்தின் கல்விமையமாக காஞ்சி இருந்ததை காட்டும் இலக்கியம்?**

(A) மணிமேகலை
(B) புறநானூறு
(C) சிலப்பதிகாரம்
(D) அகநானூறு

**174.** DEO-2023 **நெடுநல்வாடை ‘அகமா? புறமா?’ என்ற விவாதத்திற்குக் காரணமான மலர் எது?**

(A) பனம்பூ
(B) வேம்பு
(C) அத்தி
(D) வெட்சி

**175.** DEO-2023 **சிலப்பதிகாரத்தில் சொல்லப்படாத கிளைக்கதை எது?**

(A) பொற்கைப் பாண்டியன் கதை
(B) ஆதிரை வரலாறு
(C) நாளங்காடி பூதக் கதை
(D) ஊர்வசி சாப வரலாறு

**176.** Library-2023 **‘பாடாண் திணை’ எனும் ஒரே திணையை மட்டும் கொண்டு பாடப்பட்ட பனுவல்**

(A) பதிற்றுப்பத்து
(B) புறநானூறு
(C) மதுரைக்காஞ்சி
(D) மலைபடுகடாம்

**177.** Geology-2023 **“குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை” என்ற அடி இடம் பெற்றுள்ள நூல் எது?**

(A) ஆத்தி சூடி
(B) திருக்குறள்
(C) பழமொழி
(D) கொன்றைவேந்தன்

**178.** JA-2023 **‘தெளிவு குருவின் திருமேனி காண்டல்’
என்று உரைக்கும் பாடல் எது?**

(A) திருக்குறள்
(B) திருமந்திரம்
(C) ஆசாரக்கோவை
(D) பழமொழி நானூறு

**179.** JA-2023 **புதுக்கவிதைகளில் பழங்கதையைத் துணையாகக் கொண்டு ஒரு கருத்தை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படும் உத்திமுறை**

(A) படிமம்
(B) தொன்மம்
(C) குறியீடு
(D) இவற்றில் ஏதுமில்லை

**180.** JSO-2023 **‘சிறுபஞ்சமூலம்’ என்ற நூலின் மூலம் எவ்வகையான அறிவைப் பெற முடியும்?**

(A) கணித அறிவு
(B) அறிவியல் அறிவு
(C) மருத்துவ அறிவு
(D) வானவியல் அறிவு

**181.** Combined Research Assistant-2023 **பிள்ளைத் தமிழ்ப் பருவங்களுள் 'அம்மானை' பருவத்திற்குரிய காலம் எது?**

**(A)** 17 - 18 **(B)** 19 - 20
**(C)** 21 - 22 **(D)** 23 - 24

---

**182.** Research Assistant (Animal Husbandry)-2023 **கடியலூர் உருத்திரங் கண்ணனாரின் பட்டினப்பாலை செய்யுளுக்காக 1,600,000 பொற்காசுகளை வழங்கிய அரசர் யார்?**

**(A)** சேரன் செங்குட்டுவன் **(B)** கரிகாலன்
**(C)** மலையமான் **(D)** நெடுஞ்சேரல் ஆதன்

---

**183.** Junior Analyst-2023 **கோடிட்ட இடங்களை நிரப்புக:**
**"வெட்சி நிரைகவர்தல் மீட்டல் கரந்தையாம் வட்கார்மேற் செல்வது _____ யாம் உட்கா எதிரூன்றல் _____"**

**(A)** வஞ்சி, காஞ்சி **(B)** தும்பை, வாகை
**(C)** நொச்சி, உழிஞை **(D)** முல்லை, பாலை

---

**184.** Mass Interviewer-2023 **அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் – என்ன செய்யும்?**

**(A)** நாட்டை அழிக்கும் **(B)** மனிதனை மாய்க்கும்
**(C)** செல்வத்தைத் தேய்க்கும் **(D)** வலிமையை வீழ்த்தும்

---

**185.** Combined Engineering Services-2024 **தொடரைப் பொருளோடு பொருத்துக:**
**(a) முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் – 1. காதல்**
**(b) நீரின்றமையா வுலகம் போல – 2. கற்பின் மெல்லியல்**
**(c) அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும் – 3. நனி நாகரிகர்**
**(d) சாதல் அஞ்சேன் அஞ்சுவன் சாவில் – 4. பிரிவு அச்சம்**

**(A)** 4 2 1 3 **(B)** 2 1 3 4
**(C)** 3 1 2 4 **(D)** 3 2 1 4

---

**186.** Combined Engineering Services-2024 **பாடலைப் படித்துவிட்டுப் பொருத்தமான விடையைத் தேர்வு செய்க:**
**வள்ளுவர்செய் திருக்குறளை மறவற நன்கு உணர்ந்தோர்கள்**
**உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக் கொரு நீதி**
**1. இந்தப் பாடலை பாடியவர் பெ. சுந்தரனார்**
**2. எல்லாச் சாதியினர்க்கும் பொது நூல் திருக்குறள்; மனுநீதி எல்லாச் சாதிக்கும் பொதுவானதில்லை**
**3. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற குறளோடு இந்தப் பாடல்வரி பொருத்தமுடையது**
**4. இந்தப் பாடல் மனோன்மணீயம் என்னும் நாடக நூலில் இடம் பெற்றுள்ளது**

**(A)** 4 தவறு; 1, 2, 3 சரி **(B)** 1, 4 தவறு; 2, 3 சரி
**(C)** 1, 2, 3, 4 அனைத்தும் சரி **(D)** 2 மட்டும் சரி; 1, 3, 4 தவறு

SHANMUGAM IAS ACADEMY — YOUR DREAM...! OUR RESPONSE...!

**187.** Combined Engineering Services-2024 **“மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர்க்கொடுத்தோரே” என்றுரைக்கும் காப்பியம் எது?**

**(A)** சீவகசிந்தாமணி **(B)** சிலப்பதிகாரம்
**(C)** மணிமேகலை **(D)** குண்டலகேசி

**188.** Combined Engineering Services-2024 **“கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ? திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ?” என்று பாடியவர் யார்?**

**(A)** நம்மாழ்வார் **(B)** மதுரகவியாழ்வார்
**(C)** திருப்பாணாழ்வார் **(D)** ஆண்டாள்

**189.** Combined Accounts Service-2024 **“ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்” என்னும் பாடலடி இடம்பெற்ற நூல் எது?**

**(A)** திருவெம்பாவை **(B)** திருப்பாவை
**(C)** தைப்பாவை **(D)** மேற்சொன்ன எவையும் அல்ல

**190.** AAO & AHO-2024, Health Officer-2023 **_____ என்னும் தமிழ் இலக்கிய நூல் ‘நடுகல்’ நடுவதற்கான வழிமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கிறது.**

**(A)** தொல்காப்பியம் **(B)** எட்டுத்தொகை நூல்கள்
**(C)** பத்துப்பாட்டு **(D)** பதினெண்கீழ்க்கணக்கு

**191.** Group 2 & 2A-2024 **“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்” – மேற்காணும் புறநானூற்றுப்பாடல் அடி எதன் சிறப்பை வலியுறுத்துகின்றது?**

**(A)** கல்வி **(B)** ஈகை
**(C)** நேர்மை **(D)** உண்மை

**192.** G1-2024 **"மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என் செய்யும்" – என்ற பாடல் வரிகள் இடம் பெற்ற நூல் எது?**

**(A)** குறுந்தொகை **(B)** அகநானூறு
**(C)** கலித்தொகை **(D)** நற்றிணை

**193.** Combined Technical (Non-Interview)-2024 **"திரையிடும் மணலினும் பலரே உரைசெல மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே" என்ற வாழ்க்கையின் நிலையாமைத் தன்மையை எடுத்துரைக்கும் வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?**

**(A)** மதுரைக் காஞ்சி **(B)** நெடுநல்வாடை
**(C)** குறிஞ்சிப்பாட்டு **(D)** முல்லைப்பாட்டு

**194.** Combined Technical (Interview)-2024 **"கோகிலத்தை நான் விடுப்பேன் கோகுலமும் காக்கை இனம் ஆகி வலியானுக்கு அஞ்சுமே"**
**இதில் "கோகிலம்" எனப்படுவது யாது?**

**(A)** கரிக்குருவி **(B)** குயில்
**(C)** வல்லூறு **(D)** புறா

**195.** Combined Technical (Interview)-2024 **"செம்புலப் பெயல்நீர்" என்ற சொற்றொடர் யாருடைய அன்பிற்கு உவமையாக குறுந்தொகையில் கூறப்பட்டுள்ளது?**

**(A)** தலைவி தோழி **(B)** தலைவி செவிலித்தாய்
**(C)** தலைவி நற்றாய் **(D)** தலைவி தலைவன்

**196.** G1/1A-2025 **பின்வரும் பழக்க வழக்கங்களை இலக்கியத்துடன் பொருத்தவும்.**
**(a) பழி வாங்காத காதலனால் செய்யப்படும் ஒரு வழக்கம் – 1. குறுந்தொகை**
**(b) இளநீரில் பனை மற்றும் கரும்புச்சாறு ஆகியவற்றைக் கலக்கும் வழக்கம் – 2. மணிமேகலை**
**(c) வெள்ளை அரிசி மற்றும் நெய்யுடன் காக்கைக்கு நைவேத்தியம் செய்யும் வழக்கம் – 3. தொல்காப்பியம்**
**(d) வீடுகளின் சுவர்களில் ஓவியம் தீட்டும் வழக்கம் – 4. புறநானூறு**

**(A)** 3 4 1 2 **(B)** 2 4 1 3
**(C)** 4 2 1 3 **(D)** 1 4 3 2

**197.** G1/1A-2025 **பின்வருவனவற்றுள் பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.**
**1. பழங்காலத்தில் தமிழர்கள் திருமணத்தில் மணல் பரப்பி விழா எடுத்தனர் – அகநானூறு**
**2. மணமகளுக்கு மணமகன் தாலி அணிவித்தல் வழக்கமாகும் – தொல்காப்பியம்**
**3. மணமகள் வீட்டினர் மணமகன் வீட்டாருக்கு வரதட்சணை கொடுக்கும் வழக்கமிருந்தது – நன்னூல்**
**4. தீ நெறிப்பட்ட வேள்வித் திருமணம் – சிலப்பதிகாரம்**

**(A)** 1 மற்றும் 4 சரி **(B)** 1 மற்றும் 3 சரி
**(C)** 2 மற்றும் 3 சரி **(D)** 3 மற்றும் 4 சரி

**198.** G2/2A-2025 **பொருத்துக:**
**(a) ஆதரவு தேடுதலின் சின்னம் – 1. குறுந்தொகை**
**(b) அன்பின் சின்னம் – 2. அசோக மரத்தின் இலை**
**(c) காகம் ஒரு நல்ல முன்னறிவிப்பான் – 3. நற்றிணை**
**(d) பண்டில் விளையாட்டு குறிப்பிடப்பட்டுள்ளது – 4. வெள்ளை அல்லி மலர்**

**(A)** 3 4 1 2 **(B)** 2 4 1 3
**(C)** 4 2 1 3 **(D)** 1 4 3 2

**199.** G2/2A-2025 **பொருத்துக:**

**(a) தலைச் சங்கப் புலவனார் தம்முள் – 1. கம்பர்**
**(b) அகன் பொதியில் திருமுனிவன் தமிழ்ச் சங்கம் – 2. சேக்கிழார்**
**(c) கூடலின் ஆய்ந்த ஒண்டீந் தமிழ் – 3. திருஞானசம்பந்தர்**
**(d) மதுரைத் தொகையாக்கினான் – 4. மாணிக்கவாசகர்**

**(A)** 2 3 1 4 **(B)** 3 4 2 1
**(C)** 1 3 4 2 **(D)** 2 1 4 3

---

**200.** G2/2A-2025 **சங்ககால தமிழ்ச் சமூகத்தில் 'தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே' என வீரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து பாடிய பெண்பால் புலவர் யார்?**

**(A)** ஒக்கூர் மாசாத்தியார் **(B)** காவல் பெண்டு
**(C)** வெள்ளிவீதியார் **(D)** ஔவையார்

---

**201.** G2A Mains Re-Exam-2026 **கலித்தொகையில் இடம்பெற்றுள்ள சிறப்புகளைத் தேர்வு செய்க.**

**(i) மடலேறுதல் பேசப்பட்டுள்ளது.**
**(ii) உவமைகள் இடம்பெறவில்லை.**
**(iii) இழிந்தோர் காதல் இடம்பெற்றுள்ளது.**

**(A)** (i) மட்டும் **(B)** (i), (iii) மட்டும்
**(C)** (i), (ii) மட்டும் **(D)** (ii), (iii) மட்டும்

---

**202.** G2A Mains Re-Exam-2026 **மிகவும் புகழ்பெற்ற 'இந்திர விழா' _______ நகரத்தில் கொண்டாடப்பட்ட செய்தியை 'மணிமேகலை' என்ற நூலில் 'சீத்தலை சாத்தனார்' குறிப்பிடுகிறார்.**

**(A)** புகார் **(B)** காஞ்சிபுரம்
**(C)** மதுரை **(D)** உறையூர்

---

**203.** G2A Mains (Revoked)-2026 **(1) மறுமை இன்பத்தை அடைய விரும்பினால்,**
**(2) உலகம் முழுவதும் வெல்ல விரும்பினால்,**
**(3) நிலையானப் புகழைப் பெற விரும்பினால்**
**மேற்குறிப்பிட்ட மூன்று விருப்பங்களைப் பெற புறநானூற்றுப் பாடல் வழி, பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு குடபுலவியனார் செய்ய வேண்டிய செயலாக கூறுவது – எது?**

**(A)** நீர் தேங்கி நிற்கும் இடங்கள் தோறும் குளங்களை உருவாக்க வேண்டும்
**(B)** மக்களின் நலனுக்காக வரிகளைக் குறைக்க வேண்டும்
**(C)** நாட்டு மக்களின் மகிழ்ச்சியைப் பெருக்க திட்டமிட வேண்டும்
**(D)** உலக மக்களின் பாதுகாப்பின் மீது அக்கறை கொள்ள வேண்டும்

---

**204.** ARGS-2020 **'சங்கமலி தமிழ்' – என்றவர்**

**(A)** திருப்பாணாழ்வார் **(B)** குலசேகராழ்வார்
**(C)** ஆண்டாள் **(D)** திருமங்கையாழ்வார்

---

**205.** ARGS-2020 **இருந்தமிழே உன்னால் இருந்தேன் _______ விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன். (எந்த விருந்தமிழ்தம்)**

(A) இமையோர்
(B) அவையோர்
(C) உண்டோர்
(D) நட்டோர்

---

**206.** ARGS-2020 **பின்வரும் வார்த்தைகளைக் கூறியவர் யார்?**
**"இரும்பை உருக்கி, எஃகு உருவாக்கி, உறுதியான இயந்திரங்களை உருவாக்கு"**

(A) வ.உ. சிதம்பரனார்
(B) பகத் சிங்
(C) சுப்ரமண்ய பாரதி
(D) சுபாஷ் சந்திர போஸ்

---

**207.** AHGS-2021 **வரிசை I ஐ வரிசை II உடன் பொருத்தி சரியான விடையை தேர்ந்தெடு**
(a) பசிப்பிணி மருத்துவர் – 1. அகத்தியர்
(b) நன்னூல் புலவர் – 2. ம.பொ. சிவஞானம்
(c) குறுமுனி – 3. வள்ளலார்
(d) சிலம்புச் செல்வர் – 4. சீத்தலைச்சாத்தனார்

(A) 1 2 3 4
(B) 4 3 2 1
(C) 3 4 1 2
(D) 2 1 4 3

---

**208.** AHGS-2021 **கீழ்கண்டவற்றை பொருத்தி பொருத்தமான விடையைத் தேர்க**
புலவர்கள் – பாடப்பெற்றவர்கள்
(a) பரணர் – 1. குட்டுவன்
(b) ஔவையார் – 2. நள்ளி
(c) காக்கைப்பாடினியார் – 3. அழிசி
(d) கொல்லிமலை கண்ணனார் – 4. எழினி

(A) 3 4 1 2
(B) 1 2 3 4
(C) 3 4 2 1
(D) 4 2 3 1

---

**209.** TNPSC-2022 **"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின்" என்று பாடிய புலவர் யார்?**

(A) கணியன் பூங்குன்றனார்
(B) நரிவெரூஉத்தலையார்
(C) இடைக்குன்றூர்க் கிழார்
(D) இறையனார்

---

**210.** TNPSC-2022 **கற்றறிந்த சான்றோர்களின் தலைவராக புறநானூறு யாரைக் குறிப்பிடுகிறது?**

(A) கூல வாணிகன் சாத்தனார்
(B) மாமூலனார்
(C) மாங்குடி மருதனார்
(D) நப்பூதனார்

---

**211.** G6 Forest Apprentice-2022 **வசிஷ்ட முனிவரின் கூற்றின்படி, "லேக்யா" என்ற ஒரு விதமான சாட்சியம் எதனைக் குறிக்கிறது?**

(A) ஆவண சாட்சியம்
(B) சாட்சியங்கள்
(C) உடைமை
(D) செவிவழி சாட்சியம்

**212.** EO-GIII-2022 **தமிழ்நாட்டின் வால்டர் ஸ்காட் என்று கல்கி போற்றப்படக் காரணம்?**

**(A)** சமூக நாவல்கள் படைத்ததால் **(B)** துப்பறியும் நாவல்கள் படைத்ததால்
**(C)** வரலாற்று நாவல்கள் படைத்ததால் **(D)** சிறுகதைகள் படைத்ததால்

**213.** EO-GIII-2022 **கீழ்கண்டவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்க**
**புலவர்கள் – பகுதிகள்**
**(a) மருதனார் – 1. ஓரகடம் (செங்கை)**
**(b) வங்கனார் – 2. இடைக்காடு (குமரி)**
**(c) காடனார் – 3. ஆலங்குடி (புதுக்கோட்டை)**
**(d) கந்தரத்தனார் – 4. குறுங்குடி (நெல்லை)**

**(A)** 2 1 4 3 **(B)** 4 3 2 1
**(C)** 1 2 3 4 **(D)** 4 2 3 1

**214.** EO-2022 **700 வரிகளுக்கு மேல் கொண்ட பாடலான மதுரைக் காஞ்சி என்ற நூலை எழுதியவர்**

**(A)** நக்கீரர் **(B)** பரஞ்சோதி
**(C)** இளங்கோ அடிகள் **(D)** மாங்குடி மருதனார்

**215.** EO-2022 **சங்க இலக்கியத்தில் போர்க்களத்தினைக் கண்ட வீரத்தாயின் நிலையை போற்றியவர்**

**(A)** பொய்கையார் **(B)** ஒக்கூர் மாசாத்தியார்
**(C)** பாலைக் கௌதமனார் **(D)** பனம்பாரனார்

**216.** DPGS-2022 **ரோமப் பேரரசு உருவாவதற்கு முன்பிருந்தே மலபார் கடற்கரைக்கும் அரேபியாவிற்குமிடையே வியாபார தொடர்பு இருந்தது என கூறியது யார்?**

**(A)** M.R.M. அப்துர் ரஹீம் **(B)** M.M. மீரான் பிள்ளை
**(C)** A.P. இப்ராஹிம் குன்ஜ் **(D)** R.S. அப்துல் லதீஃப்

**217.** CEGS-2022 **"சங்கப் பாடல்களைத் தரத்தில் மிஞ்சியவை உலக இலக்கியத்தில் இல்லை" என்று கூறிய கேம்ப்ரிட்ஜ் பல்கலைக் கழகப் பேராசிரியர்**

**(A)** ஹார்ட் **(B)** ஆர்.ஈ. ஆஷர்
**(C)** தீக்கன் **(D)** இராபர்ட் கால்டுவெல்

**218.** G1-2022 **"ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்**
**பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டு"**
**எனச் சாவு உணர்த்தும் நிலையாமையை எடுத்துக் கூறியவர் யார்?**

**(A)** அப்பர் **(B)** திருமூலர்
**(C)** சுந்தரர் **(D)** மாணிக்கவாசகர்

**219.** G1-2022 **"தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்" எனப் பாடியவர் யார்?**

(A) திருஞான சம்பந்தர்
(B) திருநாவுக்கரசர்
(C) சுந்தரர்
(D) மாணிக்கவாசகர்

---

**220.** G1-2021 **'அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்' – எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்?**

(A) பத்திரகிரியார்
(B) பட்டினத்தார்
(C) பாரதியார்
(D) திருமூலர்

---

**221.** G1-2021 **மனத்தால் சிவனுக்குக் கோயில் கட்டிய நாயன்மார் யார்?**

(A) கண்ணப்பர்
(B) பூசலார்
(C) வாயிலார்
(D) சம்பந்தர்

---

**222.** ACF-2023 **'அறம்' என்னும் சொல்லிற்குத் தமிழில் எட்டு வகையான பொருள்கள் வழங்கி வருகின்றன என்று கூறியவர்**

(A) திருக்குறள் முனுசாமி
(B) மு. வரதராசனார்
(C) க.த. திருநாவுக்கரசு
(D) கவிஞர் வைரமுத்து

---

**223.** ACF-2023 **எதனைப் போன்று 'ஐம்புலன்களை அடக்க வேண்டும்' என்கிறார் திருமூலர்?**

(A) சிங்கம்
(B) யானை
(C) ஆமை
(D) மண்புழு

---

**224.** ACF-2023, CAGS-2022 **'பாவை பாடிய வாயால் கோவை' பாடியவர் யார்?**

(A) திருஞானசம்பந்தர்
(B) திருநாவுக்கரசர்
(C) சுந்தரர்
(D) மாணிக்கவாசகர்

---

**225.** ACF-2023 **இலங்கைத் தமிழ்ப் பேராசிரியர் கா. சிவத்தம்பி செம்மொழிப் பண்புகளாகக் குறிப்பிடுவன**

(A) தொன்மை, தொடர்ச்சி, செழுமை வளம்
(B) தொன்மை, விழுமியம், தனித்தன்மை
(C) தொன்மை, இயற்கை, தனித்தன்மை
(D) தொன்மை, தொடர்ச்சி, விழுமியம்

---

**226.** VETERINARY-ASSISTANT-2023 **திருப்பனந்தாள் காசி மடத்தை நிறுவியவர் யார்?**

(A) காளமேகப் புலவர்
(B) ஞான சம்பந்தர்
(C) அருணகிரிநாதர்
(D) குமரகுருபரர்

---

**227.** VETERINARY-ASSISTANT-2023 **'இந்திய மருந்து' எனக் கிரேக்க மருத்துவர் ஹிப்போகிரேட்டஸ் கூறிய பொருள்**

(A) மிளகு
(B) மஞ்சள்
(C) வேம்பு
(D) பட்டை

---

**228.** JUNIOR-REHABILITATION-OFFICER-2023 **நாட்டுப்புறப் பாடல் சாயலில் பக்திப் பாடல்கள் பாடிய ஆழ்வார் யார்?**

**(A)** ஆண்டாள்
**(B)** திருப்பாணாழ்வார்
**(C)** திருமழிசையாழ்வார்
**(D)** திருமங்கையாழ்வார்

**229.** JUNIOR-REHABILITATION-OFFICER-2023 **"காடு கமழும் கற்பூரச் சொற்கோ கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்" எனப் புகழப்படுபவர் யார்?**

**(A)** பாரதியார்
**(B)** பாரதிதாசன்
**(C)** சுரதா
**(D)** வாணிதாசன்

**230.** JUNIOR-REHABILITATION-OFFICER-2023 **சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் ஒரு**

**(A)** புத்த துறவி
**(B)** சமணத் துறவி
**(C)** இந்து துறவி
**(D)** கிருஸ்துவர்

**231.** JUNIOR-REHABILITATION-OFFICER-2023 **"எவ்வழி நல்லவர் ஆடவர்,
அவ்வழி நல்லை; வாழிய நிலனே"
என்று பாடிய புலவர் யார்?**

**(A)** பரணர்
**(B)** கபிலர்
**(C)** ஔவையார்
**(D)** வெள்ளிவீதியார்

**232.** DEO-2023 **"வசன நடை கைவந்த வல்லாளர்"
"வைதாலும் வழுவின்றி வைவாரே"
எனப் புகழ்ந்து பாடப்பட்டவர் யார்?**

**(A)** வள்ளல் இராமலிங்கம் அடிகள்
**(B)** ஆறுமுக நாவலர்
**(C)** பரிதிமாற் கலைஞர்
**(D)** உ.வே. சாமிநாதர்

**233.** LIBRARY-2023 **'சைவசமயக் குரவர் நால்வர்' எனப் போற்றப்படுவோர்**

**(A)** பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார்
**(B)** பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், குலசேகரர்
**(C)** சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர்
**(D)** திருமூலர், அப்பர், சுந்தரர், சம்பந்தர்

**234.** LIBRARY-2023 **"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" என்று பாடியவர் யார்?**

**(A)** திருஞானசம்பந்தர்
**(B)** திருநாவுக்கரசர்
**(C)** மாணிக்கவாசகர்
**(D)** திருமூலர்

**235.** JA-2023 **நாடகம் பற்றிய செய்தியில் மிகச் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்**

**(A)** நடிப்பதற்கு மட்டுமே உரியது நாடகம்
**(B)** படிப்பதற்கு மட்டுமே உரியது நாடகம்
**(C)** பார்ப்பதற்கு மட்டுமே உரியது நாடகம்
**(D)** நடிப்பதற்கு மட்டுமே உரிய நாடகம், படிப்பதற்கு மட்டுமே உரிய நாடகம், நடிப்பதற்கும் படிப்பதற்கும் உரிய நாடகம் என நாடகத்தை மூவகையாக மு. வரதராசன் வகைப்படுத்துகிறார்

---

**236.** JA-2023 **"இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர் என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால் துன்பங்கள் நீங்கும், சுகம் வரும் நெஞ்சினில் தூய்மை உண்டாகிடும், வீரம் வரும்" எனப் பாடியவர் யார்?**

**(A)** பாரதியார்
**(B)** பாரதிதாசன்
**(C)** பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
**(D)** சுரதா

---

**237.** JA-2023 **சரியான விடையைத் தேர்க:**
**1. பொய்கையாழ்வார் 'வையந் தகளியா வார்கடலே நெய்யாக' என்னும் பாடலைப் பாடினார்**
**2. பூதத்தாழ்வார் 'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்' என்னும் பாடலைப் பாடினார்**
**3. பேயாழ்வார் 'அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக' என்னும் பாடலைப் பாடினார்**
**4. பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய இம்மூவரும் ஒரு காலத்தவர்**

**(A)** (1), (3) சரி, (2), (4) தவறு
**(B)** (1), (4) சரி, (2), (3) தவறு
**(C)** (1), (2) சரி, (3), (4) தவறு
**(D)** (1), (2) தவறு, (3), (4) சரி

---

**238.** JSO-2023 **"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று கூறியவர் யார்?**

**(A)** ஔவையார்
**(B)** அதிவீரராம பாண்டியர்
**(C)** உலகநாதர்
**(D)** பாரதியார்

---

**239.** COMBINED-RESEARCH-ASSISTANT-2023 **கீழ்க்காணும் கூற்றுகளில் ஆழ்வார்கள் பற்றிய செய்திகளில் ஒரு செய்தி தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளதை எழுதுக.**

**(A)** குமரகுருபரர் தனது பாடலில் 'பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே' என்று திருமழிசை ஆழ்வாரைப் புகழ்கிறார்
**(B)** நம்மாழ்வார் சடம் என்னும் வாயுவை சினந்து அடக்கியமையால் சடகோபர் என அழைக்கப்படுகிறார்
**(C)** குலசேகராழ்வார் நம்மாழ்வார்மேல் கண்ணிநுண்சிறுத்தாம்பு என்னும் பாடலைப் பாடியுள்ளார்
**(D)** பெரியாழ்வார் பட்டர்பிரான் என அழைக்கப்படுகிறார்

---

**240.** MASS-INTERVIEWER-2023 **கோவலன் கண்ணகி கதையைக் கூறிய சீத்தலைச் சாத்தனார் இளங்கோவடிகளிடம் எம்முறையில் கூறினார்?**

**(A)** நீரே அடிகள் அருளுக
**(B)** அருளுக அடிகள் நீரே
**(C)** நீரே அருளுக அடிகள்
**(D)** அடிகள் நீரே அருளுக

**241.** CES-2024 **"தேவ பாடையின் இக்கதை செய்தவர் மூவர்" என்ற கம்பரின் கூற்றின்படி**

**(1) இராமாயணம் செய்த மூவர் - வான்மீகி, வசிட்டர், போதாயனர்**

**(2) வசிட்டர் செய்தது வசிட்ட ராமாயணம்**

**(3) போதாயனர் செய்தது போதாயன ராமாயணம்**

**(4) வியாசரும் ஒரு ராமாயணம் செய்துள்ளார். அது அத்யாத்ம ராமாயணம் என்று கூறுவாரும் உளர்**

**(A)** இதில் (4) தவறு, ஏனையன சரி | **(B)** (1), (2), (3), (4) ஆகிய அனைத்தும் சரி

**(C)** (3) தவறு, ஏனையன சரி | **(D)** (2), (3), (4) தவறு, (1) மட்டும் சரி

---

**242.** GROUP-2-2A-2024 **"வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்" – என்று பாடியவர்.**

**(A)** இராமலிங்க அடிகளார் | **(B)** சுந்தரர்

**(C)** நம்மாழ்வார் | **(D)** குலசேகரர்

---

**243.** GROUP-2-2A-2024 **"கல்லாரைக் காணுங்கால் கல்வி நல்காக் கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்" – இக்கவிதை வரிகளுக்கு உரியவர் யார்?**

**(A)** பாரதிதாசன் | **(B)** கண்ணதாசன்

**(C)** வண்ணதாசன் | **(D)** வாணிதாசன்

---

**244.** GROUP-1-2024 **"போற்றுவார் போற்றட்டும்" என்ற பாடலைப் பாடியவர் யார்?**

**(A)** பாரதியார் | **(B)** கவிமணி

**(C)** கண்ணதாசன் | **(D)** வைரமுத்து

---

**245.** GROUP-1-2024 **இன்ப துன்பத்தை ஒன்றாக ஏற்றுக் கொள்ளும் இராமனின் மனப் பக்குவத்தை எந்த மலருக்குக் கம்பர் ஒப்புமை செய்கிறார்?**

**(A)** மல்லிகை | **(B)** தாமரை

**(C)** லில்லி | **(D)** முல்லை

---

**246.** GROUP-1-2024 **யாருடைய சொற்றொடர் என்பதைச் சரியாக அறிந்திடுக.**
**"பழங்களை அதிகம் கொண்டுள்ள மரங்களைச் சுற்றிலும் பறவைகள் பறந்து வருவது போல நான் மிகவும் பெரிய கரிகாலனின் அரண்மனை அவைக்குச் சென்றேன்"**

**(A)** கபிலர் | **(B)** முடத்தாமக்கண்ணியார்

**(C)** நெடுங்கிள்ளியார் | **(D)** ஆளவந்தார்

**247.** CTS-IV-POST-2024 **பொய்கையாழ்வாரும், பூதத்தாழ்வாரும் எதனை அகல்விளக்காக உருவகப்படுத்துகின்றனர்?**

**(1) பொய்கையாழ்வார் பூமியை**

**(2) பொய்கையாழ்வார் சுடராழியை**

**(3) பூதத்தாழ்வார் அன்பை**

**(4) பூதத்தாழ்வார் வெண் சங்கை**

**(A)** (1), (2) மற்றும் (3)
**(B)** (1) மற்றும் (3)
**(C)** (3) மற்றும் (4)
**(D)** (2) மற்றும் (4)

---

**248.** CTS-IV-POST-II-2024 **"நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா" என்ற தொடரால் அழைக்கப்படுபவர் யார்?**

**(A)** பாரதிதாசன்
**(B)** கவிமணி
**(C)** பாரதியார்
**(D)** புகழேந்திப் புலவர்

---

**249.** GROUP-1B-1C-2024 **"சைவத் திருமணங்களில் மகிழ்ச்சியுடன் ஓதப்படும் பாடல் இது" என மு. வரதராசன் கூறும் பாடல் எது?**

**(A)** மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் எனத் தொடங்கும் பாடல்
**(B)** மாசில் வீணையும் மாலை மதியமும் எனத் தொடங்கும் பாடல்
**(C)** வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் எனத் தொடங்கும் பாடல்
**(D)** பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா எனத் தொடங்கும் பாடல்

---

**250.** GROUP-1B-1C-2024 **"நீலமணி மிடற்று ஒருவன் போல மன்னுக பெரும" என்று புறநானூற்றுப் பாடல் யாரை யார் வாழ்த்தியதாக அமைந்துள்ளது?**

**(A)** ஔவை அதியமானை
**(B)** கபிலர் பாரியை
**(C)** ஔவை தொண்டைமானை
**(D)** கபிலர் திருமுடிக்காரியை

---

**251.** APP-G2-2025 **ஒன்பது வாசல்களாகத் திருமூலர் கூறுவது**

**(A)** தஞ்சைப் பெரிய கோவில்
**(B)** சிதம்பரம் நடராஜர் ஆலயம்
**(C)** மனித உடல்
**(D)** மதுரை மீனாட்சி அம்மன் கோவில்

---

**252.** CTS-IV-POST-2025 **பிற நாயன்மார்களிலிருந்து வேறுபட்டு, இறைவனைச் சமமாகப் பாவித்து நகைச்சுவை கலந்து பாடும் மரபுடையவர்**

**(A)** சம்பந்தர்
**(B)** சுந்தரர்
**(C)** அப்பர்
**(D)** மாணிக்கவாசகர்

---

**253.** CTS-NON-IV-POST-2025 **"வேதம் தமிழ் செய்த மாறன்" – யார்?**

**(A)** பெரியாழ்வார்
**(B)** நம்மாழ்வார்
**(C)** திருமங்கையாழ்வார்
**(D)** ஆண்டாள்

---

**254.** GROUP-2A-MAINS-2026 புறநானூற்றில் ஔவையார் பாடல்களில் இடம்பெறாத செய்தி எது?

(i) போரிலே இறவாதார் வீர சொர்க்கம் அடையமாட்டார்

(ii) விழுப்புண் படாமல் இறந்தவரை தர்ப்பைப் புல்லில் புதைப்பர்

(iii) அந்தணர் இறந்தவரின் மார்பை வாளால் பிளக்கமாட்டார்

**(A)** (i) மட்டும்
**(B)** (i) மற்றும் (ii) மட்டும்
**(C)** (iii) மட்டும்
**(D)** (ii) மற்றும் (iii) மட்டும்

SHANMUGAM IAS ACADEMY

# விடைகள் மற்றும் விளக்கங்கள்

**1. (C) பாரதியார்**

மகாகவி பாரதியார் 1912-ஆம் ஆண்டு பகவத் கீதையைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

**2. (B) சபரிநாதன்**

கவிஞர் சபரிநாதன் தமது 'வால்' கவிதைத் தொகுப்பிற்காக 2019-ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமியின் யுவ புரஸ்கார் விருதைப் பெற்றார்.

**3. (A) வீரமாமுனிவர்**

இயேசுவின் வளர்ப்புத் தந்தை சூசையப்பரின் வரலாற்றைக் கூறும் தேம்பாவணி என்னும் காப்பியத்தை இயற்றியவர் வீரமாமுனிவர் (கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி).

**4. (A) கலைமாமணி**

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் கலைஞர்களுக்கு வழங்கும் உயரிய விருது 'கலைமாமணி' ஆகும்.

**5. (D) அம்பை**

அம்பை (சி.எஸ். லக்ஷ்மி) புகழ்பெற்ற பெண் எழுத்தாளர்; சுரதா, சுஜாதா, மௌனி ஆகியோர் ஆண் எழுத்தாளர்கள் (சுஜாதா என்பது எஸ். ரங்கராஜனின் புனைபெயர்).

**6. (D) கி. ராஜநாராயணன்**

'குடும்பத்தில் ஒரு நபர்' கரிசல் இலக்கிய முன்னோடி கி. ராஜநாராயணனின் படைப்பு.

**7. (B) 4 1 2 3**

பெரியபுராணம் – சேக்கிழார்; கொன்றை வேந்தன் – ஔவையார்; கலிங்கத்துப்பரணி – ஜெயங்கொண்டார்; மதுராவிஜயம் – விஜயநகர இளவரசி கங்காதேவி.

**8. (C) வை.மு. கோதை நாயகி**

வை.மு. கோதைநாயகி அம்மாள் தமிழின் முன்னோடிப் பெண் நாவலாசிரியர்; 'ஜெகன்மோகினி' இதழை நடத்தி, 100-க்கும் மேற்பட்ட நாவல்களை எழுதினார்.

**9. (C) கி. ராஜநாராயணன்**

கி. ராஜநாராயணன் 'கோபல்லபுரத்து மக்கள்' நாவலுக்காக 1991-ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றார்.

**10. (B) கவியரசு கண்ணதாசன்**

இயேசு கிறிஸ்துவின் வரலாற்றைக் கூறும் 'இயேசு காவியம்' கவியரசு கண்ணதாசனின் இறுதிப் படைப்புகளில் ஒன்று (எச்.ஏ. கிருஷ்ணப் பிள்ளை எழுதியது 'இரட்சணிய யாத்திரிகம்').

**11. (D) M.C. ராஜா**

தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர் எம்.சி. ராஜா 1925-இல் 'The Oppressed Hindus' (ஒடுக்கப்பட்ட இந்துக்கள்) என்ற நூலை எழுதினார்.

**12. (D) பொன்னீலன்**

பொன்னீலன் 'புதிய தரிசனங்கள்' நாவலுக்காக 1994-ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றார்.

**13.** **(A) அம்புஜத்தம்மாள்**

விடுதலைப் போராட்ட வீராங்கனை அம்புஜத்தம்மாள் 'நான் கண்ட பாரதம்' என்ற நூலை எழுதினார்.

**14.** **(B) அகநானூறு**

அகநானூற்றுப் பாடல்கள் 13 முதல் 31 அடிகள் வரை நீண்டிருப்பதால் அது 'நெடுந்தொகை' என அழைக்கப்படுகிறது.

**15.** **(A) தி. ஜானகிராமன்**

'மரப்பசு' தி. ஜானகிராமனின் புகழ்பெற்ற நாவல்; 'மோகமுள்', 'அம்மா வந்தாள்' ஆகியனவும் அவருடையவை.

**16.** **(A) 4 3 1 2**

சின்னசாமி – சுதந்திரம் சும்மா கிடைக்கவில்லை; கோபாலகிருஷ்ண பாரதி – நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள்; நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம் – என் கதை (தன்வரலாறு); கா. திரவியம் – தேசியம் வளர்த்த தமிழ்.

**17.** **(A) சுந்தர ராமசாமி**

சுந்தர ராமசாமி 'பசுவய்யா' என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதினார்; 'ஜே.ஜே. சில குறிப்புகள்', 'ஒரு புளியமரத்தின் கதை' அவரது நாவல்கள்.

**18.** **(A) சங்கரதாஸ் சுவாமிகள்**

சங்கரதாஸ் சுவாமிகள் 'தமிழ் நாடகத் தலைமையாசிரியர்' எனப் போற்றப்படுகிறார்; பம்மல் சம்பந்த முதலியார் 'தமிழ் நாடகத் தந்தை' எனப்படுகிறார்.

**19.** **(D) அதிவீரராம பாண்டியர்**

காசிக் காண்டம், நைடதம், வெற்றிவேற்கை (நறுந்தொகை) ஆகிய நூல்களை இயற்றியவர் அதிவீரராம பாண்டியர்.

**20.** **(D) நந்தனார் சரித்திர கீர்த்தனைகள்**

கட்டபொம்மன் கும்மி, கான் சாகிப் சண்டை, கட்டபொம்மன் கூத்து ஆகியவை வீரர்களைப் பற்றிய நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்; நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள் கோபாலகிருஷ்ண பாரதியின் இசைப் பக்தி நூல்.

**21.** **(A) ஈரோடு தமிழன்பன்**

தமிழின் முதல் சென்ரியூ தொகுப்பான 'ஒரு வண்டி சென்ரியூ'வை எழுதியவர் ஈரோடு தமிழன்பன்.

**22.** **(C) தன்னுணர்ச்சிப் பாடல்கள்**

கவிஞர் தம் சொந்த உணர்வுகளை வெளிப்படுத்தும் தன்னுணர்ச்சிப் பாடல்களே 'லிரிக்' (Lyric) எனப்படுகின்றன.

**23.** **(C) 2 3 4 1**

ஜெயகாந்தன் – அக்னிப்பிரவேசம்; மௌனி – அழியாச்சுடர்; புதுமைப்பித்தன் – சாப விமோசனம்; கு.ப. ராஜகோபாலன் – விடியுமா.

**24.** **(A) அறிவுமதி**

'புல்லின் நுனியில் பனித்துளி' என்ற ஹைக்கூ தொகுப்பை எழுதியவர் கவிஞர் அறிவுமதி.

**25.** **(B) சுகுண சுந்தரி – நடேச சாஸ்திரி**

'சுகுண சுந்தரி' நாவலை எழுதியவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை; எனவே 'சுகுண சுந்தரி – நடேச சாஸ்திரி' என்பது பொருந்தா இணை (நடேச சாஸ்திரி எழுதியது 'தீனதயாளு').

**26.** **(D) 4 1 2 3**

உலகம் சுற்றும் தமிழன் – ஏ. கருப்பன் (ஏ.கே. செட்டியார்); ஞானரதம் – தேசியக் கவி பாரதியார்; தண்ணீர் தண்ணீர் – கோமல் சுவாமிநாதன்; என் கதை – நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்.

**27.** **(C) 2 1 4 3**

திருமுருகாற்றுப்படை – நக்கீரர்; பொருநராற்றுப்படை – முடத்தாமக்கண்ணியார்; சிறுபாணாற்றுப்படை – நல்லூர் நத்தத்தனார்; குறிஞ்சிப்பாட்டு – கபிலர்.

**28.** **(C) 4 3 1 2**

இவை சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்கள்: வண்ணதாசன் – ஒரு சிறு இசை (2016); இன்குலாப் – காந்தள் நாட்கள் (2017); எஸ். ராமகிருஷ்ணன் – சஞ்சாரம் (2018); சோ. தர்மன் – சூல் (2019).

**29.** **(A) அனுத்தமா**

'மணல் வீடு' நாவலை எழுதியவர் பெண் எழுத்தாளர் அனுத்தமா; பாமாவின் நூல்கள் கருக்கு, சங்கதி போன்றவை.

**30.** **(C) (a) மற்றும் (b)**

சு. வெங்கடேசனின் 'வீரயுக நாயகன் வேள்பாரி' இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பாரியையும், இயற்கைக்கும் மனிதப் பேராசைக்கும் இடையிலான மோதலையும் சித்திரிக்கிறது; எனவே இரண்டு கூற்றுகளும் சரி.

**31.** **(C) (a), (b) மற்றும் (c)**

மாரி செல்வராஜ் இயக்கி, பா. ரஞ்சித்தின் நீலம் புரொடக்ஷன்ஸ் தயாரித்த 'பரியேறும் பெருமாள்' (2018) சாதியக் கொடுமைகளைச் சித்திரித்து, சிறந்த தமிழ்ப் படத்திற்கான பிலிம்பேர் விருதை வென்றது.

**32.** **(D) கே.ஏ. குணசேகரன்**

'பலியாடுகள்' நாடகத்தை எழுதியவர் நாட்டுப்புறக் கலைஞரும் நாடகாசிரியருமான கே.ஏ. குணசேகரன்.

**33.** **(C) குறும்பா**

மூன்று அடிகளில் அமையும் ஜப்பானிய ஹைக்கூ தமிழில் குறும்பா (சிறிய பா) வடிவமாகக் குறிப்பிடப்படுகிறது; இது துளிப்பா என்றும் அழைக்கப்படுகிறது.

**34.** **(B) டி. செல்வராஜ்**

'மலரும் சருகும்' நாவலை எழுதியவர் முற்போக்கு எழுத்தாளர் டி. செல்வராஜ்; அவர் 'தோல்' நாவலுக்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.

**35.** **(C) சிற்பி பாலசுப்ரமணியம்**

லலிதாம்பிகா அந்தர்ஜனத்தின் மலையாள நாவல் 'அக்னிசாட்சி'யைத் தமிழில் மொழிபெயர்த்ததற்காக சிற்பி பாலசுப்பிரமணியம் சாகித்திய அகாதெமி மொழிபெயர்ப்பு விருது பெற்றார்.

**36.** **(B) இராமலிங்க அடிகள்**

மனுநீதிச் சோழனின் கதையை உரைநடையில் கூறும் 'மனுமுறை கண்ட வாசகம்' நூலை எழுதியவர் இராமலிங்க அடிகள் (வள்ளலார்); 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' அவரது மற்றொரு உரைநடை நூல்.

**37.** **(B) புதுக்குரல்கள்**

சி.சு. செல்லப்பா 1962-இல் தொகுத்து வெளியிட்ட 'புதுக்குரல்கள்' தமிழின் முதல் புதுக்கவிதைத் தொகுப்பாகக் கருதப்படுகிறது.

**38.** **(D) அகல் விளக்கு**

மு. வரதராசனாரின் 'அகல் விளக்கு' நாவல் 1961-ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றது.

**39.** **(C) தம்பிரான் வணக்கம்**

ஹென்றிக் ஹென்றிக்கஸ் மொழிபெயர்த்த 'தம்பிரான் வணக்கம்' 1578-இல் கோவாவில் அச்சிடப்பட்டது; இதுவே தமிழில் அச்சான முதல் நூல்.

**40.** **(C) சுந்தரர்**

இறைவனையே தோழனாகக் கொண்டு வாழ்ந்ததால் சுந்தரர் 'தம்பிரான் தோழர்' எனப் போற்றப்படுகிறார்.

**41.** **(C) பாபநாச முதலியார்**

கும்பகோணம் கும்பேசர் மீது பாடப்பட்ட 'கும்பேசர் குறவஞ்சி'யின் ஆசிரியர் பாபநாச முதலியார்.

**42.** **(A) ஐங்குறுநூறு**

ஐங்குறுநூற்றை ஓரம்போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார் ஆகிய ஐந்து ஆண் புலவர்களே பாடினர்; எனவே அதில் பெண்பாற் புலவர் பாடல் இல்லை.

**43.** **(C) 2 3 4 1**

தண்ணீர் – அசோகமித்திரன்; கரிப்பு மணிகள் – ராஜம் கிருஷ்ணன்; கல்மரம் – திலகவதி; சாய்வு நாற்காலி – தோப்பில் முகமது மீரான்.

**44.** **(B) ஞானியால் தொடங்கப்பட்ட நாடகக் குழு**

'பரீக்ஷா' என்பது எழுத்தாளர் ஞானி (கோலப்பன் சங்கரன்) 1978-இல் சென்னையில் தொடங்கிய நவீன நாடகக் குழு.

**45.** **(B) 3 4 1 2**

பார்த்திபன் கனவு – கல்கி; தமிழ்ச் சோலை – திரு.வி.க; தேன்மழை – சுரதா; வழிப்பயணம் – தமிழ் ஒளி.

**46.** **(D) ஜெயகாந்தன், அகிலன்**

அகிலன் 'சித்திரப்பாவை' நாவலுக்காக 1975-இலும், ஜெயகாந்தன் 2002-இலும் ஞானபீட விருது பெற்றனர்.

**47.** **(B) 3 4 2 1**

வ.உ.சி. சுதேசி கப்பல் கம்பெனியைத் தொடங்கினார்; பாரதி 'பால பாரத்' இதழை நடத்தினார்; 'சங்கொலி' நாமக்கல் கவிஞரின் நூல்; 'அழகம்மை ஆசிரிய விருத்தம்' கவிமணியின் நூல்.

**48.** **(D) உழிஞைத் திணை**

புறநானூற்றில் பாடாண், காஞ்சி, வாகை முதலிய திணைப் பாடல்கள் உள்ளன; மதில் முற்றுகையைக் கூறும் உழிஞைத் திணைப் பாடல்கள் அதில் இடம்பெறவில்லை.

**49.** **(C) 3 1 4 2**

நினைவுப்பாதை – நகுலன்; காகித மலர்கள் – ஆதவன்; தந்திர பூமி – இந்திரா பார்த்தசாரதி; கடல்புரத்தில் – வண்ணநிலவன்.

**50.** **(D) 1, 2, 3, 4 அனைத்தும் சரி**

அன்பளிப்பு – கு. அழகிரிசாமி; கடவுளும் கந்தசாமி பிள்ளையும் – புதுமைப்பித்தன்; யுகசந்தி – ஜெயகாந்தன்; திருடன் மகன் திருடன் – கல்கி; எனவே நான்கும் சரி.

**51.** **(A) நாதமுனி**

பன்னிரு ஆழ்வார்களின் பாசுரங்களை நாலாயிரத் திவ்யப் பிரபந்தமாகத் தொகுத்தவர் நாதமுனிகள்.

**52.** **(A) (2) மற்றும் (3) சரி**

சீறாப்புராணம் உமறுப்புலவரும், தேம்பாவணி வீரமாமுனிவரும் இயற்றியவை; மகாபாரதம் வியாசருடையது, மணிமேகலை சீத்தலைச் சாத்தனாருடையது.

**53.** **(B) திருநாவுக்கரசர்**

திருநாவுக்கரசர் சமண சமயத்தில் இருந்தபோது 'தருமசேனர்' என்ற பெயருடன் வாழ்ந்தார்; பின்னர் சைவத்திற்குத் திரும்பினார்.

**54.** **(C) கால்டுவெல்**

திருநெல்வேலி மாவட்ட வரலாற்றை (A Political and General History of the District of Tinnevelly, 1881) ஆங்கிலத்தில் எழுதியவர் கால்டுவெல்.

**55.** **(B) சத்திய வேதக் கீர்த்தனை**

திருக்காவலூர் கலம்பகம், அன்னை அழுங்கல் அந்தாதி, அடைக்கல மாலை ஆகியவை வீரமாமுனிவர் இயற்றிய நூல்கள்; 'சத்திய வேதக் கீர்த்தனை' அவரது நூல்களுள் இடம்பெறவில்லை.

**56.** **(A) க.த. திருநாவுக்கரசு**

'திருக்குறள் நீதி இலக்கியம்' நூலுக்காக க.த. திருநாவுக்கரசு சாகித்திய அகாதெமி விருது பெற்றார்.

**57.** **(D) பெருவாயில் முள்ளியார்**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான ஆசாரக்கோவையை இயற்றியவர் பெருவாயில் முள்ளியார்.

**58.** **(D) மனோன்மணீயம்**

பேராசிரியர் சுந்தரனார் இயற்றிய 'மனோன்மணீயம்' லிட்டன் பிரபுவின் 'The Secret Way' என்ற ஆங்கிலக் கதையைத் தழுவியது.

**59.** **(A) புரட்சிக் கவி**

'புரட்சிக் கவி' பாரதிதாசனின் நூல்; கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, நிலவும் வான்மீனும் காற்றும் ஆகியவை பாரதியாரின் கவிதைகள்.

**60.** **(C) 2 1 4 3**

குறிஞ்சிப்பாட்டு 261 அடிகள், முல்லைப்பாட்டு 103 அடிகள், நெடுநல்வாடை 188 அடிகள், மலைபடுகடாம் 583 அடிகள் கொண்டவை.

**61.** **(C) கனகசபைப் பிள்ளை**

'The Tamils Eighteen Hundred Years Ago' (1904) என்ற நூலை எழுதியவர் வி. கனகசபைப் பிள்ளை.

**62.** **(B) 3 4 2 1**

தில்லைக் கலம்பகம் – இரட்டைப் புலவர்கள்; தணிகைப் புராணம் – கச்சியப்ப முனிவர்; திருவானைக்கா உலா – காளமேகப் புலவர்; கந்தர் அந்தாதி – அருணகிரிநாதர்.

**63.** **(D) நாலடியார்**

சமண முனிவர்கள் இயற்றிய நாலடியார் 'வேளாண் வேதம்' என்று அழைக்கப்படுகிறது.

**64.** **(D) குருதிப்புனல்**

1968 கீழ்வெண்மணி படுகொலையை மையமாகக் கொண்டு இந்திரா பார்த்தசாரதி எழுதிய 'குருதிப்புனல்' 1977-இல் சாகித்திய அகாதெமி விருது பெற்றது.

**65.** **(B) 3 1 4 2**

திருமுருகாற்றுப்படை – புலவராற்றுப்படை; கூத்தராற்றுப்படை – மலைபடுகடாம்; அகநானூறு – நெடுந்தொகை; முல்லைப்பாட்டு – நெஞ்சாற்றுப்படை.

**66.** **(A) 3 4 1 2**

சிறுபஞ்சமூலம் – அற இலக்கியம்; குடும்ப விளக்கு (பாரதிதாசன்) – தற்கால இலக்கியம்; சீவக சிந்தாமணி – காப்பியம்; கலித்தொகை – சங்க இலக்கியம்.

**67.** **(D) பரிபாடல்**

அகம், புறம் ஆகிய இரு பொருள்களும் கலந்து பாடப்பட்டதால் பரிபாடல் 'பொருட்கலவை நூல்' எனப்படுகிறது.

**68.** **(C) ரிஷிமூலம்**

ஜெயகாந்தனின் 'ரிஷிமூலம்' குறுநாவல் இடிபஸ் உளச்சிக்கலை மையமாகக் கொண்டது.

**69.** **(A) சூல், 'நீர்நிலைகள்'**

சோ. தர்மனின் 'சூல்' நாவல் கண்மாய் போன்ற நீர்நிலைகளின் முக்கியத்துவத்தையும் அவற்றின் அழிவையும் பேசுகிறது; இதற்கு 2019 சாகித்ய அகாதமி விருது கிடைத்தது.

**70.** **(C) [A] சரி ஆனால் [R] தவறு**

'சங்கொலி' நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளையின் கவிதைத் தொகுப்பு; ஆனால் அவர் பாரதியார் பாடல்களைத் தொகுத்தவர் அல்லர். எனவே கூற்று சரி, காரணம் தவறு.

**71.** **(C) பேயனார்**

ஐங்குறுநூற்றில் முல்லைத் திணையின் 100 பாடல்களைப் பாடியவர் பேயனார். மருதம் – ஓரம்போகியார், நெய்தல் – அம்மூவனார், குறிஞ்சி – கபிலர்.

**72.** **(A) 1 மட்டும் சரி**

சேக்கிழார் நாயன்மார்கள் வாழ்ந்த ஊர்களுக்குச் சென்று செய்திகளைத் திரட்டி பெரியபுராணத்தை இயற்றியதால், அது தமிழின் முதல் கள ஆய்வு நூல் எனப்படுகிறது.

**73.** **(A) 3 4 2 1**

கடல் புறா – சாண்டில்யன்; கடல் புரத்தில் – வண்ணநிலவன்; ஆழிசூழ் உலகு – ஜோ டி குருஸ்; கடல் சொன்ன கதை – வறீதையா கான்ஸ்தந்தீன்.

**74.** **(A) முதுமொழி என்றால் பழமொழி, காஞ்சி என்றால் நிலையாமை. இது பழமொழியில் நிலையாமையைக் கூறுகிறது**

முதுமொழிக் காஞ்சி கூடலூர் கிழார் இயற்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்; இது நிலையாமையை மட்டும் கூறாமல் வாழ்க்கைக்குத் தேவையான அறவுரைகளை (பத்து அதிகாரங்களில்) சிறுசிறு தொடர்களாகக் கூறுகிறது. எனவே (A) கூற்று தவறானது.

**75.** **(C) 2 1 3 4**

மதுரா விஜயம் – கங்காதேவி; வரதாம்பிகா பரிணயம் – திருமலாம்பா; பிரபுலிங்க லீலை – சாமரசர்; ஹரிபக்தி சாரம் – கனகதாசர்.

**76.** **(C) பதினோராம் திருமுறை**

பல ஆசிரியர்களின் பல்வகைப் பிரபந்தங்களைக் கொண்ட பதினோராம் திருமுறை 'பிரபந்த மாலை' என்று சிறப்பிக்கப்படுகிறது.

**77.** **(B) அகிலன்**

இராஜேந்திர சோழனைப் பற்றிய வரலாற்றுப் புதினம் 'வேங்கையின் மைந்தன்' அகிலன் எழுதியது; இதற்கு சாகித்ய அகாதமி விருது கிடைத்தது.

**78.** **(A) சேரர்**

எட்டுத்தொகை நூலான பதிற்றுப்பத்து, ஒவ்வொரு பத்தும் ஒரு சேர மன்னனைப் பாடும் பத்துப் பத்துகளைக் கொண்டது; இன்று எட்டுப் பத்துகளே கிடைக்கின்றன.

**79.** **(A) சுஜாதா ரங்கராஜன்**

'காகிதச் சங்கிலிகள்' சுஜாதா (எஸ். ரங்கராஜன்) எழுதிய புதினம்.

**80.** **(B) அகநானூறு**

சோழருக்கும் சேரருக்கும் இடையே கழுமலத்தில் நடந்த போர் பற்றிய குறிப்பு அகநானூற்றில் இடம்பெறுகிறது.

**81.** **(B) பள்ளு**

உழவர்களின் வாழ்க்கையைப் பாடும் பள்ளு இலக்கியம் 'மருதநில நந்தா விளக்கம்' எனச் சிறப்பிக்கப்படுகிறது.

**82.** **(B) முல்லைப்பாட்டு**

நப்பூதனார் இயற்றிய முல்லைப்பாட்டு 'நெஞ்சாற்றுப்படை' என்றும் அழைக்கப்படுகிறது.

**83.** **(B) தமிழ்வாணன்**

துப்பறியும் நிபுணர் 'சங்கர்லால்' பாத்திரத்தை உருவாக்கியவர் தமிழ்வாணன்.

**84.** **(B) குறிஞ்சிப் பாட்டு**

கபிலர் இயற்றிய குறிஞ்சிப்பாட்டு, தோழி தலைவியின் காதலைச் செவிலித்தாயிடம் வெளிப்படுத்தும் 'அறத்தொடு நிற்றல்' துறையில் அமைந்தது.

**85.** **(C) சுத்தானந்த பாரதியார்**

'பாரத சக்தி மகாகாவியம்' கவியோகி சுத்தானந்த பாரதியார் இயற்றியது.

**86.** **(C) திருவாசகம்**

மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவை திருவாசகத்தின் ஒரு பகுதி.

**87.** **(D) பதிற்றுப்பத்து**

பதிற்றுப்பத்து சேர மன்னர்களைப் பற்றியது; முதல் மற்றும் இறுதிப் பத்துகள் கிடைக்காததால் இன்று கிடைக்கும் எட்டுப் பத்துகள் எட்டு சேர அரசர்களைப் பாடுகின்றன.

**88.** **(C) மதுரைக் காஞ்சி**

மாங்குடி மருதனார் இயற்றிய மதுரைக்காஞ்சி 782 அடிகளுடன் பத்துப்பாட்டில் மிக நீளமான நூல்.

**89.** **(D) 2 3 4 1**

சாதி ஒழிப்பு – அம்பேத்கர்; பெண் ஏன் அடிமையானாள் – பெரியார்; நெஞ்சுக்கு நீதி – கருணாநிதி; நல்லதம்பி – அண்ணா.

**90.** **(B) மு. கருணாநிதி**

திருக்குறளுக்குப் புதுநடையில் விளக்கம் தரும் 'குறளோவியம்' கலைஞர் மு. கருணாநிதி எழுதியது.

**91.** **(D) ச.து.சு. யோகியார்**

'தமிழ்க்குமரி' என்ற கவிதை நூலை இயற்றியவர் ச.து.சு. யோகியார்.

**92.** **(A) ஜி.யு. போப்**

ஜி.யு. போப் 1900 ஆம் ஆண்டு திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்; திருக்குறள், நாலடியாரையும் மொழிபெயர்த்தார்.

**93.** **(B) பொய்த்தேவு**

க.நா. சுப்ரமண்யத்தின் 'பொய்த்தேவு' புதினத்தின் தலைப்பு திருவாசகத்தில் வரும் சொல்லிலிருந்து எடுக்கப்பட்டது.

**94.** **(A) தண்டலையார் சதகம், கோவிந்த சதகம்**

தண்டலையார் சதகம் ('பழமொழி விளக்கம்') மற்றும் கோவிந்த சதகம் ஆகியவை ஒவ்வொரு பாடலிலும் பழமொழியை அமைத்து இறைவனை விளித்துப் பாடப்பட்ட சதகங்கள்.

**95.** **(B) தாண்டக வேந்தர்**

'தாண்டக வேந்தர்' எனப்படும் திருநாவுக்கரசர் (அப்பர்) தாசமார்க்கத்தைப் பின்பற்றினார்; சம்பந்தர் – சற்புத்திர மார்க்கம், சுந்தரர் (தம்பிரான் தோழர்) – சக மார்க்கம்.

**96.** **(D) பாலை – பெருங்கடுங்கோ**

ஐங்குறுநூற்றில் பாலைத் திணையைப் பாடியவர் ஓதலாந்தையார்; பாலை பாடிய பெருங்கடுங்கோ கலித்தொகையின் பாலைக்கலி ஆசிரியர்.

**97.** **(A) முடியரசன்**

'ஊன்றுகோல்' கவிஞர் முடியரசன் இயற்றிய படைப்பு.

**98.** **(A) ராமாமிர்தம்**

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் தேவதாசி முறையை எதிர்த்து 'தாசிகள் மோசவலை அல்லது மதிபெற்ற மைனர்' என்ற நாவலை எழுதினார்.

**99.** **(C) ஐங்குறுநூறு**

'பகைவர் புல் ஆர்க' என்ற தொடர் ஐங்குறுநூற்றின் மருதத் திணை முதல் பகுதியான வேட்கைப் பத்தில் இடம்பெறுகிறது.

**100.** **(C) 4 3 2 1**

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் – காரைக்கால் அம்மையார்; திருப்பாவை – ஆண்டாள்; கச்சிக் கலம்பகம் – அரங்கநாத முதலியார்; பொன்வண்ணத்து அந்தாதி (திருவந்தாதி) – சேரமான் பெருமாள் நாயனார்.

**101. (C) 3 4 2 1**

வெற்றிவேற்கையை அதிவீரராம பாண்டியரும், நன்னெறியைத் துறைமங்கலம் சிவப்பிரகாசரும், நீதிநெறி விளக்கத்தைக் குமரகுருபரரும், நல்வழியை ஔவையாரும் இயற்றினர்.

**102. (C) ஹீசியட்**

கிரேக்க இலக்கியத்தில் நீதி நூல்களின் தோற்றம் ஹீசியடின் 'Works and Days' நூலிலிருந்து அறியப்படுகிறது; அதுவே முதல் கிரேக்க அறநூலாகக் கருதப்படுகிறது. (தேர்வாணைய விடைக்குறிப்பில் 'ஹோமர்' எனக் குறிக்கப்பட்டிருந்தது.)

**103. (B) நீரோட்ட யமக அந்தாதி**

நீரோட்ட யமக அந்தாதியைப் படிக்கும்போது இதழ்கள் (உதடுகள்) ஒன்றோடொன்று ஒட்டாது; எனவே அது இதழகலந்தாதி எனப்படும்.

**104. (D) கு. அழகிரிசாமி**

'அன்பளிப்பு' சிறுகதைத் தொகுப்பை எழுதியவர் கு. அழகிரிசாமி; இந்நூலுக்கு 1970-இல் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.

**105. (A) 2 4 1 3**

தொல்காப்பியர் காலத்தை க. வெள்ளைவாரணர் கி.மு. 5320 எனவும், கனகசபாபதிப் பிள்ளை கி.மு. 2 ஆம் நூற்றாண்டு எனவும், என். சுப்பிரமணியன் கி.மு. 4–3 ஆம் நூற்றாண்டு எனவும், வையாபுரிப் பிள்ளை கி.பி. 4 ஆம் நூற்றாண்டு எனவும் கணித்தனர்.

**106. (D) (3) மற்றும் (4) சரியானவை**

தொண்டைமண்டல சதகத்தை இயற்றியவர் படிக்காசுப் புலவர்; பெண்மதி மாலையை இயற்றியவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை.

**107. (C) 3 4 1 2**

கண்ணன் பாட்டு – பாரதியார்; ஆசிய ஜோதி – கவிமணி; பாண்டியன் பரிசு – பாரதிதாசன்; தமிழன் இதயம் – நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை.

**108. (D) [3] மற்றும் [4] சரி**

குன்றக்குரவை குறிஞ்சி நிலப் பெண்கள் முருகனுக்கும், ஆய்ச்சியர் குரவை முல்லை நிலப் பெண்கள் திருமாலுக்கும் ஆடியவை; எனவே 1, 2 தவறு. மரக்கால் ஆடல் கொற்றவையும், பாவைக்கூத்து திருமகளும் அசுரரை வெல்ல ஆடியவை.

**109. (B) 3 2 1 4**

தென்னாட்டுப் போர்க்களங்கள் – கா. அப்பாத்துரை; விடுதலை வேள்வியில் தமிழகம் – த. ஸ்டாலின் குணசேகரன்; விடுதலைப் போரில் தமிழக முஸ்லீம்கள் – செ. திவான்; விடுதலைப் போரில் தமிழகம் – ம.பொ. சிவஞானம்.

**110. (B) (2) மற்றும் (4) சரியானவை**

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' – கணியன் பூங்குன்றனார் (புறம் 192); 'ஈயென இரத்தல் இழிந்தன்று' – கழைதின் யானையார் (புறம் 204). 'காய் நெல் அறுத்து' பிசிராந்தையார் பாடல்; 'வள்ளியோர்ப் படர்ந்து' கோவூர் கிழார் பாடல்.

**111. (C) (3) மற்றும் (4)**

பெரியபுராணம் சேக்கிழார் இயற்றிய தமிழ்ச் சைவ நூல், உத்தர மாபுராணத் தழுவல் அல்ல; ஸ்ரீபுராணம் சமண மாபுராணத்தின் தழுவல், நாக பஞ்சமிக் கதையின் தழுவல் நாககுமார காவியமே. எனவே (3), (4) தவறான இணைகள்.

**112. (C) (2), (1), (4), (3)**

வேதநாயக சாஸ்திரியார் (1774), மாயூரம் வேதநாயகம் பிள்ளை (1826), எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை (1827), ஆபிரகாம் பண்டிதர் (1859) என்பது பிறப்பு அடிப்படையிலான கால வரிசை.

**113. (B) 2 4 1 3**

உ.வே.சா. பத்துப்பாட்டை 1889-இலும், புறநானூற்றை 1894-இலும், ஐங்குறுநூற்றை 1903-இலும், பதிற்றுப்பத்தை 1904-இலும் பதிப்பித்தார்.

**114. (D) (ii), (iii) மற்றும் (iv) மட்டும்**

பாரதியார் தேசபக்திப் பாடல்கள் பாடியவர் என்பது மட்டுமே சரி. உமர் கய்யாம் மொழிபெயர்ப்பும் 'ஆசிய ஜோதி'யும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையுடையவை; அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு பாரதிதாசனின் படைப்புகள். எனவே (ii), (iii), (iv) தவறு. (தேர்வாணைய விடைக்குறிப்பில் (ii), (iii) மட்டும் எனக் குறிக்கப்பட்டிருந்தது.)

**115. (D) (4), (2), (1), (3)**

சங்கப் பாடல்கள் எண்ணிக்கையில் கபிலர் (235) முதலிடம்; அடுத்து அம்மூவனார் (127), ஓரம்போகியார் (110), பேயனார் (105).

**116. (A) 2 3 4 1**

ஐங்குறுநூற்றில் கிழத்தி கூற்றுப் பத்து மருதம் (ஓரம்போகியார்), கிழவற்கு உரைத்த பத்து நெய்தல் (அம்மூவனார்), அன்னாய் பத்து குறிஞ்சி (கபிலர்), இளவேனிற் பத்து பாலை (ஓதலாந்தையார்) பகுதிகளைச் சேர்ந்தவை.

**117. (A) சார்லஸ் வில்கின்ஸ்**

சார்லஸ் வில்கின்ஸ் 1785-இல் பகவத் கீதையை முதன்முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

**118. (B) தொல்காப்பியம்**

இவ்வரிகள் பனம்பாரனார் இயற்றிய தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில் இடம்பெறுகின்றன.

**119. (B) நாலடியார்**

'செல்வம் சகடக்கால் போல வரும்' என்ற தொடர் நாலடியாரின் செல்வம் நிலையாமை அதிகாரத்தில் உள்ளது; செல்வம் வண்டிச் சக்கரம் போல மேலும் கீழுமாக மாறி வரும் என்பது பொருள்.

**120. (C) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)-விற்கு சரியான விளக்கம்**

பெரியபுராணம் (இரண்டாம் குலோத்துங்கன் காலம்), சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் ஆகியவை சோழர் காலத்தில் தோன்றியவை. சோழர் ஆட்சியில் தமிழ் இலக்கியம் செழித்ததே இதற்குக் காரணம்.

**121. (D) காஞ்சி**

பகைவர் படையெடுத்து வரும்போது தன் நாட்டைக் காக்க எதிர்த்து நின்று போரிடுவது காஞ்சித் திணை. வஞ்சி என்பது பகை நாட்டின்மீது படையெடுத்துச் செல்வது.

**122. (A) பாட்டுப்பாடுபவர்**

சங்க இலக்கியத்தில் பாணர் என்போர் யாழ் இசைத்துப் பாடல் பாடும் இசைக் கலைஞர்கள்; பாணாற்றுப்படை நூல்கள் இவர்களை ஆற்றுப்படுத்துகின்றன.

**123. (D) முதல்நூல்**

தொல்காப்பியம் மரபியலில் "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்" என்று முதல்நூலுக்கு இலக்கணம் கூறப்படுகிறது.

**124. (A) தங்கை**

நற்றிணை 172-இல், தலைவி சிறுமியாக இருந்தபோது விதைத்து வளர்த்த புன்னை மரத்தை 'நுவ்வை' (உன் தங்கை) எனத் தாய் கூறினாள் என்பதே உரையாசிரியர்களின் பொருள். (தேர்வாணைய விடைக்குறிப்பில் 'தமக்கை' எனக் குறிக்கப்பட்டிருந்தது.)

**125. (A) தொல்காப்பியம்**

தொல்காப்பியர் இயற்றிய தொல்காப்பியமே இன்று கிடைக்கும் மிகப் பழமையான தமிழ் இலக்கண நூல்; இது கி.மு. காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது.

**126. (C) கலிங்கத்துப்பரணி**

செயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப்பரணி, முதலாம் குலோத்துங்கனின் கலிங்கப் போர் வெற்றியையும் சோழர் கால அரசியல், சமூக நிலைகளையும் விவரிக்கிறது.

**127. (D) (iv) மட்டும்**

திருவஞ்சைக்களம் சேரநாட்டுத் தலம் (சுந்தரர், சேரமான் பெருமாள் தொடர்புடையது); கரிகால் சோழனுக்கும் அதற்கும் தொடர்பில்லை. மற்ற இணைகள் சரியானவை.

**128. (C) பெரிய புராணம்**

சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் (திருத்தொண்டர் புராணம்) 63 நாயன்மார்களின் வரலாற்றைக் கூறுகிறது; இது பன்னிரண்டாம் திருமுறை.

**129. (A) உணவு வழங்குவதன் முக்கியத்துவம்**

புறநானூறு 18-ஆம் பாடலில் குடபுலவியனார், உணவு கொடுத்தவர் உயிர் கொடுத்தவரே என்று உணவளிப்பதன் சிறப்பைப் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு எடுத்துரைக்கிறார்.

**130. (A) சேந்தனார், பெரியாழ்வார்**

சைவத்தில் ஒன்பதாம் திருமுறையில் உள்ள திருப்பல்லாண்டைச் சேந்தனாரும், வைணவத்தில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் தொடக்கமான திருப்பல்லாண்டைப் பெரியாழ்வாரும் பாடினர்.

**131. (D) பாலைக்கலி**

பொருள் தேடத் தலைவியைப் பிரிந்து செல்லும் தலைவனைத் தடுக்கும் பிரிவுப் பொருள் கொண்டது பாலைத் திணை; இவ்வடிகள் கலித்தொகையின் பாலைக்கலியில் இடம்பெறுகின்றன.

**132. (B) கணிமேதாவியார்**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திணைமாலை நூற்றைம்பது, ஏலாதி ஆகியவற்றை இயற்றியவர் கணிமேதாவியார்.

**133. (B) கானல் வரி**

சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்தின் கானல் வரியில், கோவலனும் மாதவியும் யாழிசைத்துப் பாடும் ஆற்றுவரிப் பாடல்களில் காவிரியைப் போற்றும் இவ்வடிகள் வருகின்றன.

**134. (B) தமிழ் விடு தூது**

மதுரைச் சொக்கநாதரிடம் தமிழைத் தூதாக அனுப்பும் தமிழ் விடு தூது நூலில், தேவர் அமிழ்தத்தைவிடத் தமிழே சிறந்தது என்று போற்றும் இவ்வரிகள் வருகின்றன.

**135. (B) மணிபல்லவத்தீவு**

மணிபல்லவத் தீவில் உள்ள கோமுகிப் பொய்கையிலிருந்து மணிமேகலைக்கு அமுதசுரபி கிடைத்தது; தீவதிலகை அதைப் பற்றி அவளுக்குக் கூறினாள்.

**136. (B) நற்றிணை**

நற்றிணையின் முதல் பாடலில் கபிலர் "நீரின்று அமையா உலகம் போல" என்று பாடியுள்ளார்; இக்கருத்தையே வள்ளுவர் "நீரின்று அமையாது உலகு" என்று கூறுகிறார்.

**137. (A) மதுரை**

பாண்டியர்களின் ஆதரவில் மதுரையில் நடைபெற்ற கடைச்சங்கத்தில் புலவர்கள் கூடிப் பாடல்களை ஆராய்ந்து தொகுத்தனர்.

**138. (D) பழமொழி**

முன்றுறை அரையனார் இயற்றிய பழமொழி நானூற்றில், அறிவுடையவரின் புலமையை அறிவுடையவரே அறிய முடியும் என்று கூறும் இவ்வடிகள் இடம்பெறுகின்றன.

**139. (B) பெரிய திருமடல்**

திருமங்கையாழ்வார் இயற்றிய பெரிய திருமடலில், பெண்கள் மடலேறுதல் தமிழ் மரபு அன்று; வடநெறியைப் பின்பற்றித் தலைவி மடலேறுவதாகப் பாடப்பட்டுள்ளது.

**140. (C) குண்டலகேசி**

நாதகுத்தனார் இயற்றிய பௌத்தக் காப்பியமான குண்டலகேசியில், நிலையாமையை உணர்த்தும் இவ்வடிகள் இடம்பெறுகின்றன.

**141. (B) நன்னூல்**

பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூலின் இறுதி நூற்பா "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே" என்பதாகும்.

**142. (B) இல்வாழ்க்கை தொடங்கும் போது பிறந்த இடத்துப் பாசம் விலகும்**

கலித்தொகை பாலைக்கலியில், உடன்போக்கில் சென்ற மகளைத் தேடும் செவிலித்தாய்க்கு, யாழில் பிறந்த இசை யாழுக்குச் சொந்தமில்லாதது போல மகளும் மணவாழ்வில் பிறந்த வீட்டைவிட்டுப் பிரிவாள் என்று சான்றோர் கூறுகின்றனர்.

**143. (A) ஆற்று நீர், ஊற்று நீர், மழைநீர்**

மதுரைக் காஞ்சியின் தொடக்க அடிகளில் வரும் 'முந்நீர்' என்பது ஆற்று நீர், ஊற்று நீர், மழை நீர் ஆகிய மூன்றும் சேர்ந்த கடலைக் குறிக்கிறது.

**144. (D) செங்கணான்**

பொய்கையார் இயற்றிய களவழி நாற்பது, கழுமலப் போரில் சேரன் கணைக்கால் இரும்பொறையை வென்ற சோழன் செங்கணானின் போர்க்களச் சிறப்பைப் பாடுகிறது.

**145. (A) மனோன்மணீயம்**

பேராசிரியர் பெ. சுந்தரனார் இயற்றிய மனோன்மணீயம் என்ற கவிதை நாடகத்தின் பாயிரத்தில் உள்ள "நீராருங் கடலுடுத்த" பாடலே தமிழ்நாட்டு அரசின் தமிழ்த்தாய் வாழ்த்து.

**146. (B) தலைவி பாணனிடம்**

குறுந்தொகை 75-ஆம் பாடலில் (படுமரத்து மோசிகீரனார்), தலைவன் வருகையைக் கூறிய பாணனிடம், 'நீ நேரில் கண்டாயா? கண்டவரிடம் கேட்டாயா?' என்று தலைவி வினவுகிறாள்.

**147. (B) மணிமேகலை**

இந்திர விழாவைக் கொண்டாடாததால் மணிமேகலா தெய்வத்தின் சாபத்தால் புகார் நகரம் கடலால் கொள்ளப்பட்டது என்று மணிமேகலை கூறுகிறது.

**148. (A) மணிமேகலா தெய்வம் உதயகுமரனுக்கு**

மணிமேகலையில் (துயிலெழுப்பிய காதை) மணிமேகலா தெய்வம் உதயகுமரன் முன் தோன்றி, மன்னன் செங்கோல் கோடினால் கோள்நிலை திரிந்து மழை பொய்க்கும்; மழை பொய்த்தால் மன்னுயிர் வாழா என்று அரசநெறியை அறிவுறுத்துகிறது.

**149. (C) இவ்விரண்டு வரிகளும் உழவரின் பெருமையைப் பேசுகின்றன**

இவ்விரு அடிகளும் திருக்குறள் 'உழவு' அதிகாரத்தில் (குறள் 1034, 1035) வருபவை; உழவரின் பெருமையைப் போற்றுகின்றன.

**150. (B) ஆடவர்**

புறநானூறு 187-இல் ஔவையார், நிலம் நாடாக இருந்தாலும் காடாக இருந்தாலும் 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை' என்று, ஆடவரின் ஒழுக்கமே நிலத்தின் நன்மைக்கு அடிப்படை என்கிறார்.

**151. (C) அர்ச்சுனன்**

பாஞ்சாலி சபதத்தில், தருமனைக் கடிந்த வீமனை அமைதிப்படுத்தும் அர்ச்சுனன், தருமத்தின் வாழ்வைச் சூது கவ்வினாலும் தருமம் மறுபடி வெல்லும் என்று கூறுகிறான்.

**152. (B) நற்றிணை**

நற்றிணை 216-ஆம் பாடலில் வரும் 'ஒரு முலை அறுத்த திருமா உண்ணி' பற்றிய குறிப்பு கண்ணகி கதையை நினைவூட்டுவதாகக் கருதப்படுகிறது.

**153. (A) சிலப்பதிகாரம்**

சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதை, கானல்வரி, ஆய்ச்சியர் குரவை போன்ற பகுதிகளில் தமிழரின் இசை, நடனக் கலைச் சிறப்பை விரிவாக விளக்குகிறது.

**154. (D) விருந்தோம்புதல்**

தொண்டைமான் இளந்திரையன் பாணர்களை, தாய் குழந்தையைப் பார்த்துப் பார்த்து ஊட்டுவதுபோல் அன்புடன் தானே நின்று உணவளித்ததை இவ்வரிகள் கூறுகின்றன; இது விருந்தோம்பல் பண்பு.

**155. (A) ஒருவர் மற்றவருக்கு வழி சொல்லுதல்**

‘ஆறு’ என்றால் வழி; பரிசு பெற்ற ஒருவர் பரிசு பெறாத மற்றொருவருக்கு வள்ளலிடம் செல்லும் வழியைக் கூறி ஆற்றுப்படுத்துவதே ஆற்றுப்படை.

**156. (A) நெடுநல்வாடை**

நக்கீரர் இயற்றிய நெடுநல்வாடை “வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇ” என்று வாடைக்காலத்தை வருணித்துத் தொடங்குகிறது.

**157. (C) முருகன்**

சங்க இலக்கியத்தில் முருகன் (சேயோன்) வேல் ஏந்திய போர்க் கடவுளாகவும் குறிஞ்சி நிலத் தெய்வமாகவும் போற்றப்படுகிறான்.

**158. (B) 1 2 4 3**

சிலப்பதிகாரம் உரிமைச் சுற்றத்தையும், கலித்தொகை அடிமைகளுக்கு முத்திரையிடலையும், மலைபடுகடாம் மக்களின் உணவு வழக்கங்களையும், நெடுநல்வாடை அரண்மனையின் ஆடம்பரப் பொருட்களையும் குறிப்பிடுகின்றன.

**159. (B) சொலவடை**

கேலியும் கிண்டலும் கலந்து அறிவுரை கூறும் வாய்மொழி இலக்கிய வகை ‘சொலவடை’ எனப்படும்.

**160. (B) கல்வி**

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடிய புறநானூறு 183 ஆம் பாடல், ஒரே வயிற்றில் பிறந்த பிள்ளைகளுள் கற்றவனையே தாயும் சிறப்பாக நோக்குவாள் எனக் கல்வியின் சிறப்பைக் கூறுகிறது.

**161. (B) காபாலிகர்**

மணிமேகலை கடுந்தவ வாழ்க்கை மேற்கொண்ட சைவத் துறவிகளான காபாலிகர்களைக் குறிப்பிடுகிறது; சாங்கியம், வைசேடிகம், ஆசீவகம் ஆகியவை தனித் தத்துவ மரபுகள்.

**162. (A) குறுந்தொகை**

குறுந்தொகைப் பாடல்கள் மீன், உப்பு போன்ற பொருட்களைப் பணமின்றி வேறு பொருட்களுக்கு மாற்றிக்கொண்ட பண்டமாற்று வணிகத்தைக் குறிப்பிடுகின்றன.

**163. (D) பாரதியார், பாரதிதாசன்**

பாரதிதாசன் தம் குருவான பாரதியாரைச் ‘செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை’ எனப் புகழ்ந்து பாடிய வரிகள் இவை.

**164. (A) தமிழ்நாடு**

பாரதியாரின் ‘செந்தமிழ் நாடு’ பாடலில் கலை, ஞானம், படைத்தொழில், வாணிபம் ஆகியவற்றை நன்று வளர்த்த ‘தமிழ்நாடு’ எனப் போற்றப்படுகிறது.

**165. (D) அனுமன்**

அனுமன் ‘சுந்தரன்’ என அழைக்கப்படுகிறான்; அவனது செயல்களைக் கூறும் பகுதியே சுந்தர காண்டம்.

**166. (C) ஆற்றுப்படை நூல்கள்**

பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் ஆகிய ஐந்தும் (செம்பாதி) ஆற்றுப்படை நூல்கள்.

**167. (C) ஆய் அண்டிரன்**

சிறுபாணாற்றுப்படையின்படி, நீலநாகம் தந்த கலிங்கத்தை ஆலமர் செல்வனான சிவனுக்கு அளித்தவன் ஆய் அண்டிரன்.

**168. (D) மனதை ஒருமுகப்படுத்துதல்**

கலிங்கத்துப்பரணியில் ‘யோகம்’ என்பது மனதை ஒருமுகப்படுத்தி நிலைநிறுத்தும் தவநிலையைக் குறிக்கிறது.

**169. (A) 2400**

எட்டுத்தொகை (சுமார் 2352 பாடல்கள்) மற்றும் பத்துப்பாட்டு (10) சேர்ந்து ஏறத்தாழ 2400 பாடல்களைக் கொண்டவை.

**170. (A) 2 1 4 3**

வில்லிபாரதம் சருக்கங்களாகவும், சீவக சிந்தாமணி இலம்பகங்களாகவும், கம்பராமாயணம் காண்டங்களுக்குள் படலங்களாகவும், சிலப்பதிகாரம் காண்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

**171. (A) 1, 2, 3 சரி 4 தவறு**

சீவக சிந்தாமணி 13 இலம்பகங்களும் 3145 பாடல்களும் கொண்டது; எனவே கூற்று 4 தவறு, மற்ற மூன்றும் சரி.

**172. (C) புறநானூறு**

பாரியின் பறம்பு நாட்டைப் புகழும் இவ்வரிகள் கபிலர் பாடிய புறநானூற்றுப் பாடலில் இடம்பெறுகின்றன.

**173. (A) மணிமேகலை**

மணிமேகலை காஞ்சியில் அறவண அடிகளிடம் அறம் கேட்டுத் தவம் மேற்கொண்டதாகக் கூறும் மணிமேகலைக் காப்பியம், காஞ்சி பௌத்தக் கல்வி மையமாக விளங்கியதைக் காட்டுகிறது.

**174. (B) வேம்பு**

நெடுநல்வாடையில் பாண்டியனின் அடையாளமான வேப்பம்பூ மாலை இடம்பெறுவதால், தலைவன் பெயர் சுட்டப்பட்டதாகக் கொண்டு இது புறநூலா அகநூலா என்ற விவாதம் எழுந்தது.

**175. (B) ஆதிரை வரலாறு**

ஆதிரை வரலாறு மணிமேகலையில் (ஆதிரை பிச்சையிட்ட காதை) இடம்பெறுகிறது; மற்ற மூன்றும் சிலப்பதிகாரக் கிளைக்கதைகள்.

**176. (A) பதிற்றுப்பத்து**

சேர மன்னர்களைப் புகழும் பதிற்றுப்பத்து முழுவதும் பாடாண் திணையில் அமைந்த நூல்.

**177. (D) கொன்றைவேந்தன்**

“குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை” என்பது ஔவையார் இயற்றிய கொன்றைவேந்தன் நூலின் அடி.

**178. (B) திருமந்திரம்**

“தெளிவு குருவின் திருமேனி காண்டல்” எனத் தொடங்கும் பாடல் திருமூலரின் திருமந்திரத்தில் உள்ளது.

**179. (B) தொன்மம்**

பழங்கதைகளையும் புராணங்களையும் புதுக்கவிதையில் பயன்படுத்தும் உத்தி ‘தொன்மம்’ (Myth); படிமம் என்பது காட்சிப்படுத்தல், குறியீடு என்பது சின்னம்.

**180. (C) மருத்துவ அறிவு**

காரியாசான் இயற்றிய சிறுபஞ்சமூலம், ஐந்து மருத்துவ வேர்கள் உடல்நோயைத் தீர்ப்பதுபோல் ஒவ்வொரு பாடலிலும் ஐந்து கருத்துகளால் மனநோயைத் தீர்க்கும் நூல்; இதன் பெயரே மருத்துவத்தோடு தொடர்புடையது.

**181. (B) 19 - 20**

பெண்பால் பிள்ளைத்தமிழில் 17ஆம் மாதம் நீராடல், 19ஆம் மாதம் அம்மானை, 21ஆம் மாதம் ஊசல் எனக் கடைசி மூன்று பருவங்கள் அமைகின்றன; எனவே அம்மானைப் பருவம் 19 – 20ஆம் மாதங்களுக்குரியது.

**182. (B) கரிகாலன்**

கரிகால் சோழனைப் பாடிய பட்டினப்பாலைக்காகக் கடியலூர் உருத்திரங்கண்ணனாருக்குப் பதினாறு நூறாயிரம் பொன் வழங்கப்பட்டது எனக் கலிங்கத்துப்பரணி முதலியன கூறுகின்றன.

**183. (A) வஞ்சி, காஞ்சி**

பகைவர் மேல் படையெடுத்துச் செல்வது வஞ்சி; அவ்வாறு வந்தவரை அஞ்சாது எதிர்த்து நிற்பது காஞ்சி என்பது புறத்திணை வரிசை.

**184. (C) செல்வத்தைத் தேய்க்கும்**

“அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை” (குறள் 555) – கொடுங்கோல் ஆட்சியில் மக்கள் சிந்தும் கண்ணீர் அரசனின் செல்வத்தை அழிக்கும் படையாகும்.

**185. (C) 3 1 2 4**

நண்பர் தந்தால் நஞ்சும் உண்பவர் ‘நனி நாகரிகர்’ (நற்றிணை 355); நீரின்றி அமையாத உலகம் போல் காதல் (நற்றிணை 1); இரவிலும் விருந்து வந்தால் மகிழும் முல்லை சான்ற கற்பின் மெல்லியல் (நற்றிணை 142); இறப்புக்கு அஞ்சாமல் பிரிவுக்கு அஞ்சுவது பிரிவு அச்சம் (நற்றிணை 397).

**186. (C) 1, 2, 3, 4 அனைத்தும் சரி**

இவ்வரிகள் பெ. சுந்தரனாரின் மனோன்மணீயம் நாடகத்தின் தமிழ்த்தெய்வ வணக்கப் பகுதியில் உள்ளன; பிறப்பால் அனைவரும் சமம் என்ற குறள் கருத்தோடு ஒத்து, மனுநீதி போலன்றித் திருக்குறள் அனைவர்க்கும் பொது எனக் கூறுகின்றன. எனவே நான்கும் சரி.

**187. (C) மணிமேகலை**

பசிப்பிணி போக்குவதைப் போற்றும் இவ்வரிகள் மணிமேகலையில் (பாத்திரம் பெற்ற காதை) இடம்பெறுகின்றன.

**188. (D) ஆண்டாள்**

திருமாலின் சங்கை நோக்கிப் பாடப்பட்ட இவ்வரிகள் ஆண்டாளின் நாச்சியார் திருமொழியில் உள்ளன.

**189. (A) திருவெம்பாவை**

“ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை” என்பது மாணிக்கவாசகரின் திருவெம்பாவை முதல் பாடலின் தொடக்கம்.

**190. (A) தொல்காப்பியம்**

தொல்காப்பியம் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுதல், பெரும்படை, வாழ்த்தல் என நடுகல் நடும் முறைகளை விவரிக்கிறது.

**191. (A) கல்வி**

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் புறநானூறு 183 ஆம் பாடல், ஆசிரியர்க்கு உதவியும் பொருள் கொடுத்தும் கற்றல் நன்று எனக் கல்வியின் சிறப்பைக் கூறுகிறது.

**192. (C) கலித்தொகை**

இவ்வரிகள் கலித்தொகையின் பாலைக்கலியில் (9ஆம் பாடல்) இடம்பெறுகின்றன; மலையில் பிறந்தாலும் சந்தனம் மலைக்குப் பயன்படுவதில்லை, பூசுபவர்க்கே பயன்படும் என மகளைப் பிரிந்த தாய்க்கு உவமை கூறப்படுகிறது.

**193. (A) மதுரைக் காஞ்சி**

இவ்வரிகள் மாங்குடி மருதனார் இயற்றிய மதுரைக் காஞ்சியில் உள்ளன; கடல் அலை ஒதுக்கும் மணலைவிட அதிகமானோர் உலகை ஆண்டு மறைந்தனர் என நிலையாமையை உணர்த்துகின்றன.

**194.** **(B) குயில்**

"கோகிலம்" என்பது குயிலைக் குறிக்கும் வடசொல்; குயில் காக்கைக் கூட்டில் வளர்வதால் காக்கை இனமாகக் கருதப்பட்டுத் தூது விட மறுக்கப்படுகிறது.

**195.** **(D) தலைவி தலைவன்**

குறுந்தொகை 40ஆம் பாடலில் (செம்புலப்பெயல்நீரார்) செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர் போலத் தலைவன், தலைவி நெஞ்சங்கள் கலந்தன என உவமிக்கப்படுகிறது.

**196.** **(A) 3 4 1 2**

ஒருதலைக் காதலன் மடலேறுதல் தொல்காப்பியத்திலும், முக்கனிச் சாறு கலத்தல் புறநானூற்றிலும், காக்கைக்கு நெய்ச்சோறு இடுதல் குறுந்தொகை 210இலும், வீட்டுச் சுவர்களில் ஓவியம் தீட்டுதல் மணிமேகலையிலும் கூறப்படுகின்றன.

**197.** **(A) 1 மற்றும் 4 சரி**

அகநானூற்றில் (86, 136) மணல் பரப்பித் திருமணம் நடந்தது கூறப்படுகிறது; சிலப்பதிகாரத்தில் கோவலன்-கண்ணகி தீவலம் செய்து மணந்தனர். தாலி, வரதட்சணை பற்றிய கூற்றுகள் அந்நூல்களுக்குப் பொருந்தாது.

**198.** **(B) 2 4 1 3**

காதலை வேண்டும் சின்னமாக அசோகத் தழை, அன்பின் சின்னமாக வெள்ளை அல்லி; காக்கை விருந்து வருகையை அறிவிப்பதாகக் குறுந்தொகை (210) கூறுகிறது; பண்டில் விளையாட்டு நற்றிணையில் குறிப்பிடப்படுகிறது.

**199.** **(D) 2 1 4 3**

தமிழ்ச் சங்கம் பற்றிய இக்குறிப்புகள் முறையே சேக்கிழார், கம்பர், மாணிக்கவாசகர் (திருக்கோவையார் – 'கூடலின் ஆய்ந்த ஒண்டீந் தமிழ்'), திருஞானசம்பந்தர் ஆகியோர் பாடல்களில் இடம்பெறுகின்றன.

**200.** **(B) காவல் பெண்டு**

புறநானூறு 86இல் காவற்பெண்டு, 'என் மகன் எங்கே' எனக் கேட்டவளிடம், புலி தங்கிய குகை போன்றது அவனை ஈன்ற வயிறு; அவன் போர்க்களத்தில் தோன்றுவான் எனப் பாடினார்.

**201.** **(B) (i), (iii) மட்டும்**

கலித்தொகையில் மடலேறுதல் (பெருந்திணை) பேசப்படுகிறது; குறள், கூன் போன்றோரின் இழிந்தோர் காதலும் இடம்பெறுகிறது. ஆனால் அது உவமைகள் நிறைந்த நூல்.

**202.** **(A) புகார்**

மணிமேகலையின் முதல் காதை 'விழாவறை காதை' சோழர் துறைமுக நகரான காவிரிப்பூம்பட்டினத்தில் (புகார்) இந்திர விழா கொண்டாடப்பட்டதை விவரிக்கிறது.

**203.** **(A) நீர் தேங்கி நிற்கும் இடங்கள் தோறும் குளங்களை உருவாக்க வேண்டும்**

புறநானூறு 18இல் குடபுலவியனார், 'நீரின்றி அமையாது உலகம்' என உணர்த்தி, நிலம் பள்ளமான இடங்களில் நீர்நிலைகளைப் பெருக்குமாறு பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்தினார்; அதனால் மறுமை இன்பம், உலக வெற்றி, நிலைத்த புகழ் கிட்டும் என்றார்.

**204.** **(D) திருமங்கையாழ்வார்**

'சங்கமலி தமிழ்' (சங்கம் நிறைந்த தமிழ்) எனத் தமிழைப் போற்றியவர் திருமங்கையாழ்வார் ஆவார்.

**205. (A) இமையோர்**

தமிழ்விடு தூதில், 'இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்' என, தேவர்களின் அமிழ்தத்தையும் விட தமிழே மேல் என்கிறார் புலவர்.

**206. (C) சுப்ரமண்ய பாரதி**

'இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே; இயந்திரங்கள் வகுத்திடுவீரே' எனத் தொழில் வளர்ச்சியைப் பாடியவர் பாரதியார் ('பாரத தேசம்' பாடல்).

**207. (C) 3 4 1 2**

பசிப்பிணி மருத்துவர் – வள்ளலார் (சத்திய தருமச்சாலை); நன்னூல் புலவர் – சீத்தலைச் சாத்தனார்; குறுமுனி – அகத்தியர்; சிலம்புச் செல்வர் – ம.பொ. சிவஞானம்.

**208. (C) 3 4 2 1**

பரணர் அழிசியையும், ஔவையார் அதியமான் மரபினனான எழினியையும், காக்கைப்பாடினியார் நள்ளியையும், கொல்லிமலை கண்ணனார் சேரன் குட்டுவனையும் பாடியுள்ளனர்.

**209. (B) நரிவெரூஉத்தலையார்**

புறநானூறு 195இல் நரிவெரூஉத்தலையார், நல்லது செய்ய இயலாவிட்டாலும் தீயது செய்வதைத் தவிருங்கள் என அறிவுறுத்துகிறார்.

**210. (C) மாங்குடி மருதனார்**

புறநானூறு 72இல் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் 'மாங்குடி மருதன் தலைவனாக' உள்ள புலவர்கள் தன்னைப் பாடாது போகட்டும் என வஞ்சினம் கூறுகிறான்.

**211. (A) ஆவண சாட்சியம்**

வசிஷ்ட தர்ம சூத்திரம் சாட்சியத்தை லேக்யம் (எழுத்து ஆவணம்), சாட்சி, புக்தி (உடைமை) என வகைப்படுத்துகிறது; லேக்யம் என்பது ஆவண சாட்சியம்.

**212. (C) வரலாற்று நாவல்கள் படைத்ததால்**

பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு போன்ற வரலாற்று நாவல்களால் கல்கி, ஆங்கில வரலாற்று நாவலாசிரியர் வால்டர் ஸ்காட்டுடன் ஒப்பிடப்படுகிறார்.

**213. (B) 4 3 2 1**

சங்கப் புலவர்கள் ஊர்ப்பெயருடன் அறியப்படுகின்றனர்: குறுங்குடி மருதனார், ஆலங்குடி வங்கனார், இடைக்காடனார், ஓரகத்துக் கந்தரத்தனார்.

**214. (D) மாங்குடி மருதனார்**

பத்துப்பாட்டில் மிக நீளமான மதுரைக் காஞ்சி (782 அடிகள்) மாங்குடி மருதனாரால் பாண்டியன் நெடுஞ்செழியன் மீது பாடப்பட்டது.

**215. (B) ஒக்கூர் மாசாத்தியார்**

புறநானூறு 279இல் ஒக்கூர் மாசாத்தியார், முந்தைய போர்களில் தந்தையையும் கணவனையும் இழந்தும் தன் ஒரே மகனைப் போருக்கு அனுப்பிய வீரத்தாயைப் போற்றுகிறார்.

**216. (C) A.P. இப்ராஹிம் குன்ஜ்**

கேரள வரலாற்றாசிரியர் ஏ.பி. இப்ராஹிம் குஞ்சு, ரோமப் பேரரசுக்கு முன்பே மலபார்–அரேபியா வணிகத் தொடர்பு இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

**217.** **(B) ஆர்.ஈ. ஆஷர்**

சங்க இலக்கியத்தின் தரத்தை மிஞ்சுவது உலக இலக்கியத்தில் இல்லை எனப் புகழ்ந்தவர் மொழியியல் அறிஞர் ஆர்.ஈ. ஆஷர்.

**218.** **(B) திருமூலர்**

திருமந்திரத்தில் திருமூலர், இறந்தவுடன் ஊரார் கூடி அழுது பெயரை நீக்கிப் 'பிணம்' எனப் பெயரிடுவர் என யாக்கை நிலையாமையைப் பாடுகிறார்.

**219.** **(B) திருநாவுக்கரசர்**

'தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்' என்பது திருநாவுக்கரசரின் (அப்பர்) தேவாரப் பாடல் வரி.

**220.** **(D) திருமூலர்**

'அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்; அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்' என்பது திருமூலரின் திருமந்திரப் பாடல்; அன்பே சிவம் என்பது இதன் கருத்து.

**221.** **(B) பூசலார்**

திருநின்றவூர் பூசலார் நாயனார் பொருள் இல்லாததால் தம் மனத்திலேயே சிவனுக்குக் கோயில் கட்டினார் என்பது பெரியபுராணச் செய்தி.

**222.** **(C) க.த. திருநாவுக்கரசு**

'அறம்' என்ற சொல்லுக்குத் தமிழில் எட்டு வகைப் பொருள்கள் உள்ளன எனக் கூறியவர் தமிழறிஞர் க.த. திருநாவுக்கரசு.

**223.** **(C) ஆமை**

ஆமை தன் ஐந்து உறுப்புகளையும் ஓட்டினுள் அடக்கிக்கொள்வது போல ஐம்புலன்களை அடக்க வேண்டும் என்பது திருமூலர் கூறும் உவமை.

**224.** **(D) மாணிக்கவாசகர்**

திருவெம்பாவை பாடிய மாணிக்கவாசகரே இறைவன் வேண்டுகோளின்படி திருக்கோவையாரும் பாடினார்.

**225.** **(A) தொன்மை, தொடர்ச்சி, செழுமை வளம்**

பேராசிரியர் கா. சிவத்தம்பி செம்மொழியின் பண்புகளாகத் தொன்மை, தொடர்ச்சி, செழுமை வளம் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார்.

**226.** **(D) குமரகுருபரர்**

குமரகுருபரர் காசியில் மடம் நிறுவினார்; அவர் வழியில் வந்த திருப்பனந்தாள் காசி மடம் அவரை நிறுவனராகக் கொள்கிறது.

**227.** **(A) மிளகு**

கிரேக்க மருத்துவர் ஹிப்போகிரேட்டஸ் மிளகை 'இந்திய மருந்து' என்று குறிப்பிட்டார்.

**228.** **(D) திருமங்கையாழ்வார்**

திருமங்கையாழ்வார் மடல் போன்ற நாட்டுப்புற மரபு வடிவங்களில் பக்திப் பாடல்களைப் பாடினார் (சிறிய திருமடல், பெரிய திருமடல்).

**229.** **(A) பாரதியார்**

"காடு கமழும் கற்பூரச் சொற்கோ" என்று புகழப்படுபவர் மகாகவி பாரதியார்.

**230. (B) சமணத் துறவி**

சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவனின் தம்பி; துறவு பூண்ட அவர் சமணத் துறவியாகக் கருதப்படுகிறார்.

**231. (C) ஔவையார்**

"நாடா கொன்றோ காடா கொன்றோ" எனத் தொடங்கும் புறநானூறு 187-ஆம் பாடலில் இவ்வரிகளை ஔவையார் பாடியுள்ளார்.

**232. (B) ஆறுமுக நாவலர்**

உரைநடையில் வல்லவரான யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரை "வசன நடை கைவந்த வல்லாளர்" எனப் பரிதிமாற் கலைஞர் புகழ்ந்தார்.

**233. (C) சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர்**

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சைவ சமயக் குரவர்கள் என்று போற்றப்படுகின்றனர்.

**234. (B) திருநாவுக்கரசர்**

பல்லவ மன்னனின் அழைப்பை மறுத்துத் திருநாவுக்கரசர் "நாமார்க்கும் குடியல்லோம்" என்று பாடினார்.

**235. (D) நடிப்பதற்கு மட்டுமே உரிய நாடகம், படிப்பதற்கு மட்டுமே உரிய நாடகம், நடிப்பதற்கும் படிப்பதற்கும் உரிய நாடகம் என நாடகத்தை மூவகையாக மு. வரதராசன் வகைப்படுத்துகிறார்**

மு. வரதராசன் நாடகத்தை நடிப்பதற்கு மட்டும், படிப்பதற்கு மட்டும், இரண்டுக்கும் உரியது என மூவகையாகப் பிரிக்கிறார்.

**236. (B) பாரதிதாசன்**

தமிழ்க் கல்வியின் சிறப்பைக் கூறும் இவ்வரிகளைப் பாடியவர் பாவேந்தர் பாரதிதாசன்.

**237. (B) (1), (4) சரி, (2), (3) தவறு**

'வையந் தகளியா' பொய்கையாழ்வாருடையது; 'அன்பே தகளியா' பூதத்தாழ்வாருடையது; 'திருக்கண்டேன்' பேயாழ்வாருடையது. முதலாழ்வார் மூவரும் சமகாலத்தவர்.

**238. (A) ஔவையார்**

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது ஔவையாரின் கொன்றை வேந்தனின் முதல் அடி.

**239. (C) குலசேகராழ்வார் நம்மாழ்வார்மேல் கண்ணிநுண்சிறுத்தாம்பு என்னும் பாடலைப் பாடியுள்ளார்**

நம்மாழ்வார் மீது 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' பாடியவர் மதுரகவியாழ்வார்; குலசேகராழ்வார் அல்லர். எனவே அக்கூற்று தவறு.

**240. (D) அடிகள் நீரே அருளுக**

கதையைக் கேட்ட இளங்கோவடிகள் அதைக் காப்பியமாக்க எண்ணியபோது, சாத்தனார் "அடிகள் நீரே அருளுக" என்று வேண்டினார் என்று பதிகம் கூறுகிறது.

**241. (B) (1), (2), (3), (4) ஆகிய அனைத்தும் சரி**

தேவமொழியாகிய வடமொழியில் இராமன் கதையைச் செய்தவர் வான்மீகி, வசிட்டர், போதாயனர் என மூவர் என்று கம்பர் கூறுகிறார்; வியாசர் பெயரில் அத்யாத்ம ராமாயணமும் வழங்குகிறது. எனவே நான்கு கூற்றுகளும் சரி.

**242. (D) குலசேகரர்**

திருவேங்கடமலையில் ஏதேனும் ஒரு பொருளாக இருக்க விரும்பி "வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்" என்று பாடியவர் குலசேகராழ்வார் (பெருமாள் திருமொழி).

**243. (A) பாரதிதாசன்**

கல்வி வழங்காதவர்களைக் கடுமையாகச் சாடும் இவ்வரிகள் பாரதிதாசனுடையவை.

**244. (C) கண்ணதாசன்**

"போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும்" என்று பாடியவர் கவியரசு கண்ணதாசன்.

**245. (B) தாமரை**

முடிசூட்டு எனக் கேட்டபோதும் காடு செல் எனக் கேட்டபோதும் இராமனின் முகம் அப்போது மலர்ந்த செந்தாமரையை வென்றது எனக் கம்பர் கூறுகிறார்.

**246. (B) முடத்தாமக்கண்ணியார்**

கரிகால் சோழனைப் புகழும் பொருநராற்றுப்படையை இயற்றியவர் முடத்தாமக்கண்ணியார்; இவ்வுவமை அந்நூலில் இடம்பெறுகிறது.

**247. (B) (1) மற்றும் (3)**

பொய்கையாழ்வார் 'வையம் தகளியா' என உலகை அகலாகவும், பூதத்தாழ்வார் 'அன்பே தகளியா' என அன்பை அகலாகவும் உருவகிக்கின்றனர்.

**248. (C) பாரதியார்**

தமிழரின் நீண்ட உறக்கத்தைப் போக்கப் பாடி வந்த நிலா எனப் பாரதிதாசன் பாரதியாரைப் போற்றினார்.

**249. (A) மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் எனத் தொடங்கும் பாடல்**

திருஞானசம்பந்தரின் 'மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்' எனத் தொடங்கும் பதிகம் சைவத் திருமணங்களில் ஓதப்படுவதாக மு. வரதராசன் குறிப்பிடுகிறார்.

**250. (A) ஔவை அதியமானை**

நெல்லிக்கனியைத் தனக்கு அளித்த அதியமானை "நீலமணி மிடற்று ஒருவன் போல மன்னுக" என ஔவையார் வாழ்த்தினார் (புறநானூறு 91).

**251. (C) மனித உடல்**

திருமூலர் மனித உடலையே கோயிலாகக் கொண்டு அதன் ஒன்பது துவாரங்களை ஒன்பது வாசல்கள் என்கிறார்.

**252. (B) சுந்தரர்**

இறைவனைத் தோழனாகக் கொண்டு (தம்பிரான் தோழர்) உரிமையுடனும் நகைச்சுவையுடனும் பாடியவர் சுந்தரர்.

**253. (B) நம்மாழ்வார்**

வேதங்களின் சாரத்தைத் தமிழில் திருவாய்மொழியாகப் பாடியதால் நம்மாழ்வார் (மாறன்) 'வேதம் தமிழ் செய்த மாறன்' எனப்படுகிறார்.

**254.** **(C) (iii) மட்டும்**

புறநானூறு 93-இல், போரில் விழுப்புண் படாமல் இறந்தவரைத் தர்ப்பைப் புல்லில் கிடத்தி, நான்மறை அந்தணர் வாளால் பிளந்து வீரர் செல்லும் உலகுக்கு அனுப்புவர் என ஔவையார் கூறுகிறார்; எனவே 'அந்தணர் வாளால் பிளக்கமாட்டார்' என்ற செய்தி இடம்பெறவில்லை.

SHANMUGAM IAS ACADEMY